மூன்று சாய் பிரச்சாரகர்கள்

# திரிவேணி





ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி



ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி



ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி

தொகுப்பாளர்

டாக்டர் ஜி.ஆர். விஜயகுமார்

***'THREE SAI PRACHARAKS: TRIVENI': Sri Narasimha Swamiji, Sri Radha krishna Swamiji, Sri Sivanesan Swamiji'*** - is a compilation of life sketches of three ardent devotees of Sri Shirdi Sai Baba. Compiled by Dr. Sri G.R. Vijayakumar. Rendered into Tamil by Sri S.S. Mahadevan.

| | | |
|---|---|---|
| Published by | : | Kethuhalli Dwarakamayi Sai Mandir,<br>Bengaluru |
| Published On | : | April 27, 2019<br>(Birthday of Sri Sivanesan Swamiji) |
| Price | : | Sai Seva |
| Printed by | : | MADHAVA MUDHRA<br>'SEVA', No.79, Dr. Alagappa Road,<br>Purasaiwalkam, Chennai - 600 084<br>Ph: 044 - 2642 0870 |



# ஏன் இந்த நூல்?

உலகத்துக்கு ஆன்மீகப் பாதை காட்ட வாழையடி வாழையாக மகான்களை வழங்கி வரும் பூமி என்பதால் பாரத தேசத்தை புண்ணிய பூமி என்று அழைப்பார்கள். ஸ்ரீ ஷீரடி சாய் பாபா அத்தகைய மகான். அவர் மகாசமாதி அடைந்ததன் நூற்றாண்டு கடந்த வருடம் நிறைவடைந்தது. இன்று உலகில் எத்தனையோ நாடுகள் உள்பட பாரதத்திலும் கோடானுகோடி சாய் பக்தர்கள் ஸ்ரீ பாபாவின் வாழ்வும் வாக்கும் காட்டிய பாதையில் தங்கள் வாழ்க்கையை நேர்த்தியாக அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீ சாய் பாபாவை தெரியாதவர்கள் கிடையாது. ஆனால் குடத்திலிட்ட விளக்கு போல் இருந்த அந்த மகானை, குன்றின் மேலிட்ட தீபமாக நாடறிய, உலகறியச் செய்ததில் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண சுவாமிஜி, ஸ்ரீ சிவநேசன் சுவாமிஜி ஆகிய மூன்று பெரியோர்கள் ஆற்றிய பணி அபாரமானது. அதற்காகவே அவர்களின் வாழ்க்கை சந்தடியில்லாமல் சமர்ப்பணமானது. ஸ்ரீ பாபாவின் அருளாற்றலை உணர்ந்த பக்தர்கள் பெரும் பாலும் இந்த மும்மூர்த்திகள் பற்றி கேள்விப்பட்டிருக்க கூட மாட்டார்கள்.

இந்த மும்மூர்த்திகள் வாழ்வும் பணியும் பற்றி சாய் பக்தரான டாக்டர் ஜி.ஆர். விஜயகுமார் மிகுந்த சிரத்தையுடன் தகவல்கள் தொகுத்து நூலாக்கி பரிவுடனும் பக்தியுடனும் சாயி பக்தர்கள் பார்வைக்கு சமர்ப்பித்திருக்கிறார். மூத்த சென்னை பத்திரிகையாளர் எஸ்.எஸ். மகாதேவன் தமிழாக்கினார்.

'பெங்களூரு கேதோஹள்ளி துவாரகாமயி சாய் மந்திர்' வெளி யிடும் இந்த நூலை பாபாவின் பக்தர்கள் அந்த மூன்று பெரியோர் களின் அருள் ஆசியாக ஏற்று சாய் சேவையில் தங்கள் வாழ்வின் அர்த்தத்தை கண்டுணர்வார்கள் என்று நம்புகிறோம்.

நூலின் விலை: சாய் சேவா.

# முன்னுரை

'***மூன்று சாய் பிரச்சாரகர்கள் : திரிவேணி: ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி, ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி***' என்கிற இந்தத் தொகுப்பை உருவாக்கி சில வார்த்தைகள் எழுத எனக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எனது பெரும் பேறு.

மனிதன் , ஜடம் – ஜீவன் இவற்றின் சங்கமம். இவை இரண்டும் தாழ்த்தும் / உயர்த்தும் போக்குகள். நமது இந்த உள்ளார்ந்த ஆன்மிகத்தை நாம் புறக்கணிப்பதால்தான் நல்ல உடல் நலமும் நல்ல மன நலமும் பெற்றிருந்தாலும் நம்மில் பலர் துன்பத்தில் உழல்கிறோம்.

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி 'லைப் ஆப் சாய்பாபா' என்று அற்புதமானதோர் புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறுகிறார்: "நாமெல்லாம் ஆன்மீக அனுபவம் கிடைக்கப் பெறுகிற மனித ஜீவன்கள் அல்ல, மாறாக மானுட அனுபவம் பெறுகின்ற ஆன்மீக ஜீவன்கள்". இந்த சாதுக்களின் வாழ்க்கை பற்றி நாம் படிக்கும் போது நாம் ஆன்ம நிலைக்கு உயர்கிறோம். சனாதனமான தெய்வீகத்துடன் இணைந்து இருப்பதாக உணர்கிறோம், உன்னத ஆன்மீக ஸத்வம் அடையப் பெறுகிறோம்.

'நான் உனக்குள், நீ எனக்குள்' என்ற தத்துவத்தை ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி வாழ்ந்து காட்டினார். விஷ்ணு சஹஸ்ரநாம பாராயணம் செய்யும்படி அவர் தரும் ஒரு துளி தெய்வீக ஊக்கம் கூட ஆயிரக்கணக்கான சாய் பக்தர்களை மிகப்பெரிய ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றியிருக்கிறது. யதார்த்தமாக, எளிய வாழ்வு வாழ்ந்து காட்டிய ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி பண்டைக் காலத்து ரிஷியை நமக்கு நினைவூட்டி னார். அவர் நாம ஜபம் செய்து காட்டி முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

பாபா கிணற்றடியில் அமர்ந்து தன்னுடைய குடலை அடியோடு வெளியே எடுத்து அதை துணி துவைப்பது போல சுத்தம் செய்வார். அவரது இந்த 'தோத்திபோத்தி' யோகாவும் சரி, கந்தலில் தொங்க விடப்பட்ட பலகையில் நான்கு எண்ணெய் விளக்குகள் எரிய, எடையே இல்லாதவராகக் கண்ணுறங்குவதும் சரி, அவரை பரபிரம்மமாகக் காட்டு கின்றன. ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி,


ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி மூவரும் அரும்பாடுபட்டு சூட்சும சத்தியத்தை தேடினார்கள். பாபா வழிகாட்டியபடி 'தக்ஷிணா' நாணயத்தின் இரு பக்கங்கள் போன்ற நம்பிக்கையும் பொறுமையும் - அறிவை விட - நம்பகமான அணுகுமுறை என்று அவர்கள் வாழ்ந்து காட்டி நிரூபித்தார்கள். சாய் பாபா மீது நம்பிக்கை வைத்து அவரிடம் பக்தி செலுத்தி வந்தால் எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்வின் போதும் 'இருப்பது எது' என்பதை நமக்கு காட்டித் தரும்; நிச்சயமாக 'இருக்க வேண்டியது எது' என்பதை அல்ல.

இந்த புத்தகத்தை வெளியிட நடந்துள்ள முயற்சியைப் பாராட்டுகிறேன். எத்தனையோ பக்தர்கள் ஆன்மீக மேனிலை அடைவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

ஸ்ரீ சாய் பாபாவும் மும்மூர்த்திகளான ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி, ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி ஆகிய பெரியோர்களும் நம் அனைவருக்கும் அருள் புரியட்டும்.

- டாக்டர் ஜி. ஆர். விஜயகுமார்

## டாக்டர் ஜி. ஆர். விஜயகுமார்



பல்வேறு சாய் பத்திரிகைகளில் 1977 முதல் அவர் எழுதி வரும் கட்டுரைகள், கவிதைகள் வாயிலாக டாக்டர் ஜி. ஆர். விஜயகுமார் (பிறப்பு 1949) சாய் பக்தர்களுக்கு அறிமுகமானவர். ஸ்ரீ ராதாகிருஷ்ணன் சுவாமிஜியால் சாய் மார்க்கத்திற்கு ஆற்றுப்படுத்தப் பட்டவர். 1977 ல் இருந்து 2016 வரை அவர் சாய் ஆன்மீக மையத்துடன் இணைந்து இருந்தார். ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி பற்றி அவர் எழுதிய புத்தகம் 13 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 'லவிங் காட்' என்ற சாய்பாபா பற்றிய அவரது இன்னொரு புத்தகம் புது டில்லி ஸ்டெர்லிங் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. தேசிய அளவில் விற்பனையில் சாதனை படைத்தது என்ற புகழ் பெற்றது. இவர் எழுதிய

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியின் வாழ்க்கை வரலாறு நூலுக்கு The Profile Of Greatness என்று பெயர். ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியிடமும் இவர் அன்பு பூண்டவர். ஆங்கிலத்திலும் கன்னட மொழியிலும் 23 நூல்கள் எழுதியுள்ள இவர் எழுதிய 2,000 க்கும் மேற்பட்ட கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.


பெங்களூரு பல்கலைக்கழகத்தில் எம்.பி.பி.எஸ்., எம். டி பட்டங்கள் பெற்ற டாக்டர் விஜயகுமார் ஸ்ரீலங்காவிலும் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இது தவிர ஊட்டச்சத்து இயல், தொழிலக ஆரோக்கியம் இரண்டிலும் பட்டமேற்படிப்பு டிப்ளமோ பெற்றுள்ளார். முன்னணி மோட்டார் தொழிலகமான அசோக் லேலண்டின் மருத்துவ சேவைத் துறையில் தலைமைப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர் இவர். பணி ஓய்வுக்குப் பிறகு 2007 முதல் ராஜீவ் காந்தி ஆரோக்கிய பல்கலைக்கழகத்தின் மதிப்புறு பேராசிரியர் பணியிலும் All India Institute Of Local Self Government அமைப்பின் கௌரவ முதல்வர் பதவியிலும் சேவை செய்தார்.

பல்வேறு விருதுகள் பெற்றவர் டாக்டர் விஜயகுமார். 2015 ல் என்சிஇஆர்டி அமைப்பின் ராஷ்ட்ர பூஷண் விருது; எய்ட்ஸ் தடுப்பு பணிக்காக யுஎஸ்எய்ட் அமைப்பின் சர்வதேச விருது; 107 முறை ரத்ததானம் செய்ததற்காக குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. 1988 முதல் 2007 வரை ஆஷ்லி நியூஸ் என்ற நிறுவனப் பத்திரிகை ஆசிரியராக பணிபுரிந்த போது இருமுறை 'தலை சிறந்த எடிட்டர்' விருது பெற்றார். 1986 முதல் 2016 வரை 29 வருடங்கள் 'சாய்பாதானந்தா' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் பொறுப்பில் செயல்பட்டார்.

பல்வேறு நாடுகளுக்கு அவர் சென்று வந்துள்ளார். ஆசிரியப் பணியில் அவருக்கு மிகுந்த விருப்பம். இன்றும் கூட மாணவர்கள் மத்தியில் இவர் நேரம் செலவிடுவதைப் பார்க்கலாம். நூலாசிரியராகவும் சாய் பக்தையாகவும் விளங்கிய இவரது மனைவியார் சீதா, 2010 ல் பாபா திருவடிகளை அடைந்தார். இரு புதல்வர்கள் ரகு, சாய் பிரசாத் மென்பொருள் பொறியாளர்கள். திருமணமாகி நல்வாழ்வு நடத்துபவர்கள். 'நல்லபடியாக வாழு, நல்ல செயல் செய்' என்பதே இவர் வாழ்வின் தாரகம்.

# ஸ்ரீ புட்டண்ணா

*இந்த நூல் ஸ்ரீ புட்டண்ணா அவர்களின் அன்பான ஆசியுடன் வெளியாகிறது.*



தற்போது வயது 92 ஆகும் ஸ்ரீ புட்டண்ணா (கே.எஸ். நாகராஜராவ்) ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி ஆகியோர் செய்துவந்த மாபெரும் பணிகளை நேரில் கண்டு அதுபற்றி அறிந்து வைத்துள்ள ஒரு சிலரில் ஒருவர். இவரது தாய் மாமா எம். சுப்பராமையா 1953 ல் இவரை சாய்பாபா மார்க்கத்திற்கும் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜிக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

மெட்ரிக் வரை படித்த புட்டண்ணா பாரத அரசின் மத்திய சில்க் போர்டில் பணியில் அமர்ந்தார். எழுத்தராகப் பணி தொடங்கிய அவர் விரைவில் அதிகாரியாக உயர்ந்து நற்பெயர் எடுத்தார். ஏழை எளியவர்களை பரிவுடன் நடத்தினார். அவர்கள் இவரை மகான் என்று கொண்டாடினார்கள். சில்க் போர்டில் தனது பணிக்காலம் முழுதும் ஸ்ரீ புட்டண்ணா அப்பழுக்கற்ற முறையில் செயல்பட்டார். எவரும் அவருக்கு பரிசு கொடுத்து ஆசை காட்டவோ சிக்க வைக்கவோ முடியாது.

மும்பையில் பணியாற்றிய காலத்தில் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி பல முறை நேரில் வந்து பார்த்து புட்டண்ணாவுக்கு ஆசிவழங்குவது உண்டு. அந்த நாட்களில் இவர் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமிஜியுடன் சாய் பிரச்சார் பணியிலும் ஈடுபட்டார். 1986ல் பணிஓய்வு பெற்ற பிறகு சாய் சேவையில் முழுமையாக ஈடுபடுவதற்காக பெங்களூரு தியாகராஜநகரா பகுதியில் வசிக்கலானார். புட்டண்ணா சாய் பாபாவை நாடிச் செல்ல வில்லை. ஆனால் சாய்பாபா ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி வடிவில் வந்து தனது அருளை மனிதகுலத்திற்கு வழங்குவதில் இவரை ஒரு கருவியாக்கிக் கொண்டார். இவரது பஜனை, நாமஜபம், சாய்பாபா பூஜை, சத்தியநாராயண பூஜை இவற்றால் ஏராளமான பக்தர்கள் இவரிடம் ஈர்க்கப்பட்டு இவரை பெருமதிப்புடன் "ஸ்ரீ புட்டண்ணா குருஜி" என்றே அழைக்கலானார்கள். பல சித்திகள் இவரது ஆணைக்காக

காத்திருந்தன இவரோ அவற்றுக்காக ஏங்கவும் இல்லை, அவற்றை பயன்படுத்தவும் இல்லை. அன்றாடம் பூஜை செய்வார்; அதன்பிறகு 'சாயி ஸத் சரித' பாராயணம் செய்வார்.

அவர் 1986 - 2004 ல் லலிதா சகஸ்ரநாமம், 'ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெய ஜெய சாய்' என்ற சாய் நாம ஜெபம் ஆகியவற்றின் பாராயணத்தை அறிமுகப்படுத்தினார். நாம ஜபத்தை லிகித ஜெபம் ஆகவும் எழுதி வர பயிற்சி கொடுத்தார். அவர் உலக வழக்கப்படி படிப்பாளி அல்ல.ஆனால் கன்னடத்தில் அவர் எழுதிய 15 நூல்களிலும் தத்துவ ஞானமும் ஆன்மீகச் செறிவும் மிளிர்கின்றன. அவர் பெரிய பேச்சாளர் அல்ல. ஆனால் அவரது வார்த்தைகளில் நேர்மையும் பக்தியும் பதிந்திருந்தன.

2004 ல் 'சாய்ஸ்பந்தனா சத்சங்' என்ற அமைப்பை நிறுவினார் புட்டண்ணா. விஷ்ணு சஹஸ்ரநாமம், சாய் நாம ஜெபம் இவற்றின் வாயிலாக சாய் பிரச்சார் பணி வேகமெடுத்தது. 'ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி' ஜெபத்தை ஒரு கோடி முறை லிகித ஜெபமாக எழுதச் செய்து அதை மல்லேஸ்வரம் மந்திரின் அஸ்திவாரம் ஆக்கினர். மேலும் ஒரு 5 கோடி 'ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி' நாமாக்களை லிகித ஜெபம் ஆக்கி கன்னியாகுமரி சமுத்திரத்தில் சங்கமிக்க செய்தார்.

அவரது மகத்தான சாதனை என்றால் பல்வேறு மாநிலங்களில் பல ஊர்களில் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை 9 கோடி முறை பாராயணம் செய்யச் செய்ததுதான். தவிர 1,000 விஷ்ணு சஹஸ்ரநாம ஹோமங்களை நடத்தியிருக்கிறார். இவரது சாதனைகளுக்காக இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் 2017 ல் அளிக்கப்பட்டது.

சாய் பாபாவும் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியும் 1953 ல் அவருக்கு ஆசி வழங்கியதையடுத்து புட்டண்ணா ஷீரடிக்கு பலமுறை சென்று வந்துள்ளார். அனேக ஊர்களில் சாய் மந்திர் கட்டுவதற்கு உதவி அளித்துள்ளார். 2014 ல் புட்டண்ணா குடல்வால் கட்டி, அடிவயிற்று உள்சுவர் தொற்று இவற்றால் உயிரே பறி போகும் நிலைக்குச் சென்று மீண்ட சம்பவம் நடந்தது. பெங்களூரு பாணசங்கரி மூன்றாவது ஸ்டேஜ் பகுதியில் புட்டண்ணா தமது மனைவியாருடனும் மகனுடனும் பேரனுடனும் வசித்து வருகிறார்.

# இந்த சாய் பக்தர் நினைவாக இந்த நூல்



கே. நாகராஜன்
1960 - 2018

அனைவராலும் அன்புடன் 'சாய் நாகராஜன்' என்று அழைக்கப்படுபவர் உடுமலைப்பேட்டையைச் சேர்ந்த ஸ்ரீ நாகராஜன். அவர் தமிழகத்தின் சாயி பக்தர்களிடையே பரவலாக அறியப்பட்டவர், மதிக்கப்பட்டவர். பக்தியில் ஊறிய நடுத்தர வர்க்க தமிழ்க் குடும்பத்தை சேர்ந்த இவர், தமிழக அரசின் விவசாயத்துறையில் கண்காணிப்பு பொறியாளராக (எஸ் இ) உயர்ந்தார் என்றால் அவரது சுயமான உழைப்பும் நேர்மையும் அர்ப்பணிப்புமே காரணம். 35 ஆண்டுகள் அரசுப் பணி புரிந்தபின் 2018 ஜூன் மாதம் பணி ஓய்வு பெற்றார் 2018 நவம்பரில், 58வது வயதில் அகால மரணமடைந்தார். அவர் மனைவியார் ரேவதி. இந்த அன்பு தம்பதிக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உண்டு.

ஸ்ரீ நாகராஜனின் அறிவாற்றல் உன்னதமானது. அவர் ஒரு ஆன்மீகவாதி. சாய்பாபாவின் 'நாம சரண்', தியான பக்தி இவற்றில் தோய்ந்தவர். வேதாந்தம் கற்றவர். அதுபோல மற்ற தத்துவ ஞான நூல்களையும் கற்றறிந்து தனது சாய் பக்தியை வலுப்படுத்திக் கொண்டார். சத்தியம், அன்பு, ஆனந்தம் கொண்டார். ஆன்மீகத்தில் அவர் பரந்த வானம் போல. பக்தியில் அவர் ஆழ்ந்த சமுத்திரம் போல. சாய்பாபாவிடம் அவர் கொண்ட பக்தி அனைவரையும் கவர்ந்தது.

உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ள ஷீரடி ஸ்ரீ அனந்த சாய்பாபா கோயிலுக்கு பிரதானமான நிறுவனர் நாகராஜன். கோயில் கட்டப்பட்ட காலம் தொட்டு ஐந்து ஆண்டுக் காலம் தனது கடைசிநாள் வரை ஆலய நிர்வாகக் குழு சேர்மனாக இருந்து செயல்பட்டார். உடுமலைப்பேட்டை நகரவாசிகளுக்கும் சுற்றுவட்டார மக்களுக்கும் சாய்பாபாவின் அருள்வாக்கு எட்டச் செய்தார். ஷீரடி சாய்பாபாவின்

பாதாரவிந்தத்தை சரண் அடையும் பாதையை பக்தர்களுக்கு காண்பித்து வந்த அயராத ஊழியர் அவர். சமூக சேவை, பணிவு இவை அவரது அடையாளங்கள். டிரஸ்டிகள், தன்னார்வத் தொண்டர்கள், பக்தர்கள் இணைந்து உடுமலைப்பேட்டை கோயிலை மிக சிறப்பாக நிர்வகிக்கிறார்கள். அது தவிர ஏராளமான சமூக சேவைகளும் அங்கே நடைபெற்று வருகிறது

ஷீரடி சாய்பாபா மேல் நாகராஜன் கொண்ட பக்தி பின்பற்றத் தக்கது. பெங்களூரு புறநகர்ப் பகுதியான கேதுஹள்ளியில் துவாரகாமயி சாய் மந்திர் அமைத்த பிரதான நிறுவனர்களில் அவரும் ஒருவர். சாய்பாபாவின் பளிங்குச் சிலை ஒன்றை 2018 ஆகஸ்டில் கொண்டு வந்த அவர், விக்கிரக பிரதிஷ்டை குறித்த சடங்குகளையும் வழிபாட்டையும் முறையாக நடத்துவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால் மண்டல பூஜை நாளுக்கு முன்னதாகவே அவர் சாய்பாபாவின் திருப்பாதங்களை சென்றடைந்து விட்டார்.

பணி ஓய்வுக்கு பிறகு உடுமலைப்பேட்டையில் உள்ள சாய்பாபா கோயிலிலேயே அவர் தனது பெரும்பாலான நேரத்தை செலவிட்டு வந்தார். பலமுறை ஷீரடிக்கும் சென்று வந்தார். அகந்தை அகல வேண்டுமானால் அதற்கான முக்கியமான சாதனைகளில் ஒன்று சாயி பஜன்களில் ஈடுபடுவது என்பது அவரது வலுவான நம்பிக்கை. அது சத்குருவோடு நம்மை சங்கமிக்க செய்கிறது என்பார். பஜனை என்றால் அவருக்கு மிகவும் பிடித்த விஷயம். பல சாயி பஜன்களில் அவர் பாடுவதும் உண்டு.

சாய் நாகராஜனை நினைத்தாலே 'குருவே சரணம்' என்ற சொற்றொடர் தான் மனதில் பளிச்சிடும். நாள் முழுதும் சதாகாலமும் குருவே சரணம் என்று தான் அவர் உச்சரித்துக்கொண்டே இருப்பார். அவர் அகால மரணம் அடைந்தாலும் சாய்பாபா பக்தர்களின் இதயங்களில் அவர் என்றென்றும் நிலைத்திருப்பார்.




मौनव्याख्याप्रकटितपरब्रह्मतत्वं युवानं
वर्षिष्ठान्तेवसदृषिगणैरावृतं ब्रह्मनिष्ठैः ।
आचार्येन्द्रं करकलितचिन्मुद्रमानन्दमूर्तिं
स्वात्मारामं मुदितवदनं दक्षिणामूर्तिमीडे ।।

वसुदेवसुतं देवं कंस चाणुरमर्दनम् ।
देवकीपरमानन्दं कृष्णं वन्दे जगद्गुरुम् ।।



सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।।


ஸ்ரீ தத்த குரு பரம்பரை
ஸ்ரீதத்தாத்ரேயர்
ஸ்ரீ பாத வல்லபர்
ஸ்ரீ நுர்சிய சரஸ்வதி
ஸ்ரீ ஹக்கல்கோட்மஹராஜ்
சாமிசமர்த்
ஸ்ரீ சாய் பாபா
ஸ்ரீ கஜானன் மஹராஜ்
ஸ்ரீ சங்கர்மஹராஜ்



காஞ்சி
காமகோடி பீடம்
சங்கராச்சார்யார் ஸ்ரீ
சந்திரசேகரேந்திர
சரஸ்வதி ஸ்வாமிகள்
(மகா பெரியவா)

எளிய வாழ்க்கை வாழ்ந்த இரு ஆன்மிக இமயங்கள்



ஷீரடி
திருத்தலத்தில்
இருந்தபடி
அருளாட்சி செய்த
ஸ்ரீ ஷீரடி சாய்பாபா

# ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி அறிமுகம்

ஸ்வாமிஜி ரமண மகரிஷி பற்றி 1929ல் ‘ஆத்ம தரிசனம்’ என்ற நூல் எழுதி அவரை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். இது அவரது 25% பங்களிப்பு. 1936ல் உபாசனி மகராஜ் பற்றி



‘சாகோரி மகான்’ என்ற நூல் எழுதி அவரை அறிமுகப்படுத்தினார். இது அவரது இன்னொரு 25% பங்களிப்பு. 1936 முதல் 56 வரை சாய்பாபா பற்றி நூல் எழுதி, சொற்பொழிவுகள் நிகழ்த்தி, தொடர்புகள் செய்து அவரை உலகறியச் செய்தார். இது அவரது எஞ்சிய 50% பங்களிப்பு.

ஸ்வாமிஜி ஷீரடி பூஜாரி களுக்கு வேத முறைப் படி ‘பூஜாவிதி’ கற்றுக்கொடுத்தார். விஸ்ணு சகஸ்ரநாம பாராயணம், மூன்று ஆரத்திகள் இவற்றை அறிமுகப்படுத்தினார். பக்தி பூர்வமாக அஷ்டோத்தரம் இயற்றினார். சாய் சகஸ்ரநாமமும் இயற்றினார்.

கோயம்புத்தூரில் 1943 ஜனவரி 7 அன்று ஒரு ராஜநாகம் வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்கிவிட்டு புற்று ஒன்றில் மறைந்தது. 1944ல் நாகசாயி மந்திர் நிர்மாணிக்கப் பட்டது. பொதுமக்கள் நிதியுதவி செய்தார்கள். ஏ.பி.சாரி சிறப்பு முயற்சி செய்தார். நரசிம்ம ஸ்வாமிஜி சாய்பாபாவின் அருள் வாக்குகளை முன்னின்று பரப் பினார். சாயி இயக்கப்பணி விறு விறுப்பாக வளர்ந்தது.

ஸ்வாமிஜி 1956 அக்டோபர் 19 ம்தேதி அதிகாலை 3.45க்கு சமாதியடைந்தார். அன்று பௌர்ணமி. தனக்கு நினைவிடம் கட்டக்கூடாது என்று அவர் சொல்லியிருந்தார். எனவே பெசன்ட் நகர் பொது மயானத்தில் தகனம் நடந்தது. சுத்தானந்த பாரதியார், ஸ்வாமி கேசவய்யா ஆகியோரின் முன்னிலையில் இறுதி சடங்குகள் நடந்தன. 82 வயதில் ஸ்வாமிஜி முழு பிரக்ஞையுடன் இருக்கும்போது உடலை நீத்தார். எந்தவொரு நோயோ வலியோ இல்லை.

# ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி

(1874 ஆகஸ்ட் 21 - 1956 அக்போடர் 19)

# ஸ்ரீ ஷீரடி சாய் பாபாவின் அரிய தூதர்

*இவர் பாரத நாடு நெடுக ஷீரடி சாய்பாபா மகிமைகளைப் பிரச்சாரம் செய்தவர். பக்தர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை தொகுத்து நூல் எழுதியவர். வேறு பல நூல்களும் எழுதியுள்ளார். அவற்றைப் படித்த மக்கள் தரிசனம் செய்ய ஷீரடி செல்லலானார்கள். ஷீரடியில் இருந்த பாபாவை இவர் அனைவரும் அறியச் செய்தார். சமாதி மந்திரில் இவரது உருவப்படத்தை நீதியரசர் ரெகே திறந்து வைத்தது, பாபா பற்றி பாரதம் முழுவதும் அறியச் செய்வதற்காக இவர் மேற்கொண்ட அபார முயற்சிக்கு அஞ்சலியாக அமைந்தது. சாய்பாபாவின் மகத்தான அருள் தூதராக போற்றப்பட்டவர் இவர்.*

**தொ**டக்கத்தில் பாபா புகழை ஸ்ரீ நரசிம்ம சுவாமி பரப்பினார். பிறகு பாபாவின் பல்வேறு பக்தர்கள் பிரச்சாரம் செய்தார்கள். அதன் விளைவாக பாரதநாடு முழுதும், ஏன், நாலா திசைகளிலும் உள்ள நாடுகள் உள்பட உலகெங்கிலும் பாபா நன்கு அறியப்பட்டவர் ஆகிவிட்டார். அதுபோலவே வியப்புக் குரிய இன்னொரு விஷயம், தொலைதூர மூலைகளில்

உள்ள சின்னஞ்சிறு தேசங்களில் கூட ஸ்ரீ சாய்பாபா குறித்த கட்டுரைகளை மக்கள் படித்திருக்கிறார்கள். அத்தகைய சில நாடுகள்: கியூபா (ஹவானா), தைவான், லிதுவேனியா, பெனின், ருவாண்டா. இவை பூமிப்பந்தில் நாலாபுறமும் பரவிக்கிடக்கும் நாடுகள். தென் கரீபியக் கடலில் உள்ள தீவு - அநேகமாக உலகிலேயே மிகச் சிறிய தீவு - செயின்ட் மார்ட்டின். மக்கள் தொகை சுமார் 38,000 தான். அந்தத் தீவு மக்கள் கூட பாபாவின் சான்னித்தியத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பது பிரமிக்க வைக்கிறது. அதையும் விட குறைந்த மக்கள் தொகை கொண்ட குராக்கோ தீவு தென் கரீபியக் கடலில் வெனிசுவேலா கரையை அடுத்து அமைந்துள்ளது. அந்த சின்னஞ்சிறு தீவுநாட்டு மக்களும் கூட பாபா பற்றிய கட்டுரைகளைப் படிக்கிறார்கள். பாபா கடவுள் அவதாரம் என்பதால் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் எல்லா மக்களும் அவரை அறிந்திருக்கிறார்கள், அவரை உணர்ந்திருக்கிறார்கள் இப்படி இந்த அதிசயத்திற்கு விளக்கம் சொல்லமுடியும்.

நரசிம்மன் (பின்னாளில் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி என்று அறியப்பட்டவர்) தமிழ்நாட்டின் அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் பவானி நகரில் ஆச்சாரமான அந்தணர் குலத்தில் பிறந்தது 1874 ஆகஸ்ட் 21ம் தேதி. அவரது பெற்றோர் வெங்கடகிரி ஐயர் - அங்கிச்சி அம்மாள். அவர் படிப்பில் படுசுட்டியாக விளங்கினார். சேலத்தில் மெட்ரிக் தேறினார் பிறகு சென்னை சென்று பி.ஏ, பி.எல் பட்டங்கள் பெற்றார். 1895 ல் சேலம் திரும்பிய அவர் அங்கு வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டு அங்கேயே வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். ஏழை எளிய மக்கள் அனாவசிய வில்லங்கத்தில் சிக்கி ஏராளமாக பணச்செலவு செய்து அவதிப்படுவதை எதிர்த்தார். அவர் சுபாவமே அப்படி. எனவே செலவு இல்லாமல் சமரசம் செய்து வைத்தே நிறைய வழக்குகளை தீர்த்து வைப்பதில் முக்கிய பங்காற்றினர். படாடோபம் இல்லாத அவரது எளிமை, நேர்மை, பரோபகாரப் பண்பு ஆகியவற்றால் மக்கள் அவரை வெகுவாகப் பாராட்டினார்கள், உயர்வாக மதித்தார்கள். அவர் சேலம் நகராட்சி சேர்மன் ஆனார். அவரது அரிய சட்ட நிபுணத்துவம், வழக்குகளில் அவர் காட்டிய

தெள்ளத் தெளிவான வாதத் திறமை, இவற்றால் அவர் புகழ் பரவியது, வெற்றிகள் குவிந்தன. வழக்குகளுடன் ஏராளமான கட்சிக்காரர்கள் அவரை நாடி வந்தார்கள். அபரிமிதமாக வருமானம் வந்தது. சமுதாயத்தில் அபார செல்வாக்கு ஏற்பட்டது. அவரது மனைவியார் சீதாலட்சுமி அம்மாள் புதல்வர்களும் புதல்விகளும் சூழ வசதியான குடும்ப வாழ்க்கை தந்த மகிழ்ச்சியில் திளைத்தார். ஆனால் சமயப்பற்று உள்ளவராக, பக்தி மிக்கவராக விளங்கினார். ஏழை எளிய மக்களுக்கு உதவும் எண்ணம் கொண்டவராகத் திகழ்ந்தார்.

ஏராளமாக செல்வம் சேர்த்தாலும் பொதுத்தொண்டு புரிவதில் ஸ்ரீ பி.வி நரசிம்ம ஐயருக்கு நாட்டம் இருந்தது. அரசியலிலும் ஈடுபாடு கொண்டார். பால கங்காதர திலகரைப் போற்றிய அவர் திலகர் அடியொற்றி நடந்தார். பொதுத்தொண்டில் அவருக்கு இருந்த அபார நாட்டத்தை அங்கீகரிக்கும் விதத்தில் 1912 - ம் ஆண்டு சென்னை சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1920ம் ஆண்டு வரை அவர் இந்தப் பதவியை வகித்தார். சட்ட மேலவையில் தமிழில் உரை நிகழ்த்திய முதல் இந்திய உறுப்பினர் அவர். ஸ்ரீமதி அன்னி பெசன்ட் அம்மையார் தொடங்கிய ஹோம் ரூல் லீக் கட்சியின் உறுப்பினராகி தீவிரமாக செயல்பட்டார். பாரதத்திற்கு தன்னாட்சி வேண்டும் என்று இங்கிலாந்து மக்கள் மத்தியில் வாதிடுவதற்காக இங்கிலாந்து அனுப்பப்பட்ட மூன்று பேரில் இவர் ஒருவர். நரசிம்ம ஐயரின் சமகாலத்தவர்களான முன்னணி தேசியத் தலைவர்கள் ராஜாஜி என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ சி. ராஜகோபாலச்சாரி, ஸ்ரீ விஜயராகவாச்சாரி ஆகியோர். அவர்கள் இருவருமே சேலத்தைச் சேர்ந்தவர்கள். சென்னை மாகாணத்தின் பொதுவாழ்வில் புகழ்மிக்க பிரமுகரானார் நரசிம்ம ஐயர். அவர் எங்கு உரையாற்றினாலும் கேட்க பெருந்திரளாக மக்கள் கூடிவிடுவார்கள்.

அவருடைய குழந்தைகள் ஜெயராம், சாவித்ரி ஆகிய இருவரும் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது தற்செயலாக கிணற்றில் விழுந்து மூழ்கி இறந்தது அவரது குடும்பத்திற்குப் பேரிடி, அவருக்குப் பேரதிர்ச்சி. இது 1921ல். இந்த சம்பவத்திற்கு பின்னர், அவர் தனது லாப கரமான வக்கீல்

தொழிலைக் கைவிட்டு அரசியல், சமூக நடவடிக்கைகளில் இருந்தும் விலகினார். மற்ற மகன்களைப் படிக்க வைத்திருந்தார், அவர்கள் பொருளாதார ரீதியாக சொந்தக் காலில் நிற்கத் தொடங்கியிருந்தனர். அவரது மற்ற புதல்விகள் ராஜலட்சுமி, சாரதாமயி ஆகியோருக்கு ஏற்கனவே திருமணமாகி வாழ்வில் செட்டில் ஆகியிருந்தனர். குடும்ப, பொது விவகாரங்களில் பற்றில்லாதவராக மாறினார் அவர்; லக்ஷ்மிநாராயணர் கோயில் திருப்பணியை ஏற்று நடத்தி முடித்தார்.

அதன்பிறகு 1925ல் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடுவதற்காக சத்குரு ஒருவரை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டார். இந்த திசையில் அவர் மேற்கொண்ட முயற்சிகளில் புனித ஜகத்குரு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளை சிருங்கேரியில் சந்தித்தார். திருவண்ணாமலையில் (ரமண மகரிஷி என பிரபலமாக விளங்கிய) 'பிராமண ஸ்வாமியை' சந்திக்கும்படி அவர் அறிவுரை கூறினார். அதன்படி அவர் திருவண்ணாமலை சென்று, 3 ஆண்டுகளாக குகை ஒன்றில் ரமணருடன் தங்கினார். 'நான் யார்?' என்று தியானித்தபடி வேதாந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். திருவண்ணாமலையில் தங்கியிருந்த போது அவர் ’சுயம் கண்டுணர்தல்’ (Self Realisation) என்னும் தலைப்பில் ரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதினார். இந்த புத்தகம் மூலம், ரமணா மகரிஷி நாட்டின் பல பகுதிகளிலும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அறியப்பட்டார். அதன் விளைவாக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் இருந்து எத்தனையோ ஆன்ம சாதகர்கள் திருவண்ணாமலையை நாடலானார்கள். ரமணரை இவ்வாறு அவர் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தினார். ரமண மகரிஷியை நாடறியச் செய்ததில் நரசிம்ம ஸ்வாமிஜியின் 25% பங்களிப்பு காரணம்.

பின்னர் ஒன்பது மாதங்கள் வரை ஹுப்ளியில் சித்தாரூட ஸ்வாமிஜியுடன் தங்கினார். சித்தாரூடர் 1929 இல் சமாதி அடைந்தார். பின்னர் அவர் பண்டர்பூர் சென்று 18 மாதங்கள் விட்டலனை வணங்கினார். அதன் பின்னர் புணே அருகே கேட்காம் சென்று சத்குரு நாராயண் மகாராஜை சந்தித்தார்.

அஹமத்நகர் அருகிலுள்ள மெஹராபாத் செல்லும்படி அவர் அறிவுறுத்தினார். அவர் அங்கு சென்று மெஹர் பாபாவுடன் தங்கியிருந்தார், ஆனால் மெஹர் பாபா ஏற்கனவே மௌனம் ஏற்றுவிட்டிருந்தார். 'வடக்கில் செல்' என்று ஒரு ஸ்லேட்டில் எழுதிக் காட்டினார் மெஹர் பாபா. சாகோரிவாசியான ஸ்ரீ உபாசனி மகராஜ், பாபாவின் சீடர். பின்னர் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி 1933 ல் உபாசனி பாபாவைச் சந்திக்க சாகோரி சென்றார். அங்கு உபாசனி மகாராஜை சட்டப்பூர்வ புதிர் ஒன்றிலிருந்து காப்பாற்ற வேண்டியிருந்தது. பெண்கள் வேத சடங்குகளை செய்ய இயலவேண்டும் என்பதற்காக ஒரு சமூக சீர்திருத்தமாக உபாசனி அறுபது இளம் பெண்களை திருமணம் செய்து கொண்டார். இது ஒரு சமூக நோக்கத்துடன் செய்யப்பட்டது. பாலியல் மகிழ்ச்சிக்காக அல்ல. உபாசனிக்கோ வயது சுமார் 65. ஆனால் சமுதாயம் அவரது பலதார மணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டு பொது நல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த சட்ட மோதலில் உபாசனி மகாராஜை ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி ஆதரித்து வாதிட்டார். 1936 இல் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதற்குள் உபாசனியின் வாழ்க்கை வரலாற்றை 'சாகோரி மகான்' என்ற தலைப்பில் புத்தகமாக வெளியிட்டார். உபாசனி மஹாராஜை இவ்வாறு வெளி உலகிற்கு அவர் அறிமுகப்படுத்தினார். இது ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியின் 25% பங்களிப்பு.

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி தனது வாழ்க்கை எந்த நோக்கமும் திசையுமின்றி நடந்திருப்பதாக உணர்ந்தார், அலைச்சல்தான் மிச்சம் என்று தோன்றியது.. அவர் ஷீரடி ஸ்ரீ சாயி பாபாவை பற்றி உபாசனி பாபா சொல்லக் கேட்டதுண்டு. ஸ்ரீ உபாசனி பாபாவுக்கு ஆன்மீக முயற்சியில் சாயிபாபா உதவினார் என்று அறிந்திருந்தார். ஆனால் 1918ல் இறந்த ஒரு புனிதர் 1936ல் தனக்கு உதவ முடியாது என்று நினைத்ததாலோ என்னவோ, ஷீரடிக்குப் போக வேண்டும் என்று அவருக்குத் தோன்றவில்லை.

ஊர் பேர் தெரியாத ஒரு பட்டாணியர் காட்டிய வழியில் போய் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி 1936 ஆகஸ்டு 29 அன்று ஷீரடியில் சாய்

பாபா சமாதிக்கு சென்றார். அமைதியாக நின்று சமாதியையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரது வாழ்விலேயே ஆனந்தம் பரிபூரணமாக பொங்கிய தருணம் அது. பாபா அவரிடம் மௌன மொழியில் பேசி அவருக்கு ஆன்மீக பேரின்பம் அளித்தார். தான் மகிழ்ச்சியில் திளைப்பதாக அப்போது ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி கூறினார். தன்னால் தாங்க இயலாத அளவுக்கு ஆன்மீக ஆனந்தம் பாபாவிடம் இருந்து கிடைத்தது என்றும் தெரிவித்தார். ஒரு வழியாக சாய்பாபாவே தனது சத்குரு என கண்டுணர்ந்தார். எந்நேரமும் சாய்பாபாவுடன் ஆன்மிகத் தொடர்பில் தான் லயித்து வாழ்ந்து வருவதாகவும் அவர் உணர்ந்தார்.

சுவாமிஜி ஷீரடிக்கு 1936ல் சென்ற போது, பின்வரும் பாபாவின் பக்தர்கள் வாழ்ந்திருந்தார்கள்; அவர்களுடன் அவர் தொடர்பு கொண்டார்: ஷாமா, தாத்யா, அப்துல் பாபா, லக்ஷ்மிபாய் ஷிண்டே, சகுன் மேரு நாயக், பாளாசாஹேப் பாடே, பி.வி.தேவ், மார்த்தாண்ட் மகாராஜ், ராமச்சந்திர பாடீல், காகா மஹாஜனி (லக்ஷ்மண் கணேஷ்), லக்ஷ்மண் மாமா ஜோஷி, பாகோஜி ஷிண்டே ஆகியோர். 1936 க்குப் பிறகு, பல்வேறு இடங்களில் நீதிபதி எம்.பி.ரெகே, நீதிபதி பி.ஆர்.அவஸ்தே, தாஸ் கணு மஹராஜ், உபாசனி பாபா, எச்.வி. ஸாட்டே, பேராசிரியர் ஜி.ஜி நர்கே, ஆர்.பி.புரந்தரே, தாமோதர் ஸாவல்ராம் ரஸனே, தத்தாத்ரேய தாமோதர் ரஸனே, சாய் சரணானந்த்ஜி, கேட்காம் நாராயண் மஹராஜ், பாபாவின் தீவிர பக்தர்களுடைய பிள்ளை கள் ஆகியோர். அவர்களிடமிருந்து பாபாவைப் பற்றிய மதிப்பு வாய்ந்த தகவல்கள் சேகரித்தார். சுவாமிஜி இந்த பக்தர்களை ஷீரடியில் சந்தித்ததுடன் அனுபவங்களைக் கேட்டறிவதற்காக பல ஊர்களுக்கும் சென்றார். பாபாவின் ஒரு பணியாளரான ரகுஜி ஷிண்டேவை அவர் சந்தித்து அவருடைய அனுபவங்களையும் கேட்டறிந்தார். இவ்வாறு சுவாமிஜி பக்தர்களின் அனுபவங்களை சேகரித்து அவற்றை 1941 ல் வெளியிட்டார். வியக்க வைத்த இந்த சேவை மூலம் பாபாவின் மகத்துவத்தைப் பற்றி வரும் தலைமுறைகள் அறியச் செய்தார். இது ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியின் எஞ்சிய 50% பங்களிப்பு.

1936 வரை, ஷீரடிக்கு வந்து கொண்டிருந்தவர்கள் சிலரே. பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கலாம். சுவாமிஜி

தேசத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பாபாவின் செய்தியைக் கொண்டுசெல்லத் தீர்மானித்தார். அதற்காக பாபாவின் வாழ்க்கைப் பணிகளையும் பாபா நிகழ்த்திய அற்புதங்களையும் அருள்வாக்குகளையும் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் பரப்ப சுற்றுப்பயணம் செய்தார். அந்த நாட்களில் வாழ்ந்து வந்த பாபாவை சந்திக்கும் பெரும் பேறு பெற்றவர்களான, பாபாவின் ஆசீர்வாதம் கிடைக்கப் பெற்றவர்களான பக்தர்களிடமிருந்து தகவல்களை கேட்டறிவதற்காக முயன்று சிறிது மராட்டி மொழி கற்றுக் கொண்டார். இந்த விதமாக, அவர் 60 க்கும் மேற்பட்ட பக்தர்களை பேட்டி கண்டார், தகவல் கேட்டறிந்தார். அவர்களின் உலகியல் வாழ்க்கையிலும் ஆன்மீக சாதனாவிலும் பாபா எப்படியெல்லாம் அவர்களுக்கு உதவினார் என்பதை தெளிவாக வெளிப்படுத்தும் சாய்பாபாவுடனான அவர்களின் அனுபவங்களை பதிவு செய்தார். சாய்பாபாவின் தீவிர பக்தரான நீதிபதி எம்.பி. ரெகே சுவாமிஜியை அழைத்தார். அவர் மூலம் குவாலியரில் நீதிபதி பி.ஆர்.அவஸ்தேயை சந்திக்க முடிந்தது. அவஸ்தே உதவியால் மராட்டியில் 'ஸ்ரீ சாய் சத்சரிதா' நூலையும் சாய் லீலா மாதப் பத்திரிகை இதழ்களையும் பிற மராட்டி வெளியீடுகளையும் சுவாமிஜி வாசிக்க முடிந்தது. அவஸ்தேயிடம் மராட்டி கற்றுகொண்ட அவர் மராட்டி மொழிப் புத்தகங்களை படிக்கலானார். இவ்வாறு பாபாவைப் பற்றி நன்கு அறிந்துகொண்டார். பின்னர், நீதிபதி எம்.பி. ரெகே, நீதிபதி அவஸ்தே ஆகியோருடன் மகாராஷ்ட்ராவில் பல இடங்களில் சுற்றுப்பயணம் செய்து பெரிய பெரிய கூட்டங்களில் ஆங்கிலத்திலும் மராட்டியிலும் உரை நிகழ்த்தினார். 1938 - 39 க்குள் சென்னை 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் சாய்பாபா பற்றி தொடர் கட்டுரை எழுதினார். அவருடைய எழுச்சியூட்டும் கட்டுரைகள் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் 30 - 40 இதழ்களில் (மொத்தம் 20,000 பிரதிகள்) வெளியிடப்பட்டன.

பாரதம் முழுவதும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாபா பற்றியும், அவரது பணி, அவரது அற்புதங்கள் பற்றியும் தெரிந்து கொள்ள இவ்வாறு அடித்தளம் அமைக்கப்பட்டது. ஆர்.பி. புரந்தரே, பி.வி. தேவ் ஆகியோரிடமிருந்து அவர் பாபாவைப் பற்றிய முழுமையான தகவல்கள் சேகரித்திருந்தார்;

அவர்களுக்கு பாபாவிடம் ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றியும் கேட்டறிந்திருந்தார். பாபாவிடம் நானா சாஹேப் சாந்தோர்கர் பெற்ற அனுபவங்களைப் பற்றி நரசிம்ம ஸ்வாமிஜிக்கு இந்த இரண்டு பக்தர்களும் தெரிவித்திருந்தனர்.

இந்த எல்லா முயற்சிகளின் விளைவாக, 1936 ல் இருந்து ஷீரடிக்கு மக்கள் அலையலையாக வரத் தொடங்கினார்கள். முன்பெல்லாம் ஷீரடி கிராமத்திலிருந்து சுமார் ஒரு டஜன் உள்ளூர் கிராமவாசிகள், சமாதிமந்திரில் ஆரத்தியின் போது வந்து கலந்து கொள்வார்கள். பாபா மகாசமாதி அடைந்தபின் உடனடியாக ஷீரடி வருவோர் அதிகம் இல்லாததால் மசூதிக்கு எதிரே இருந்த சகுன் மேரு நாயக்கின் உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலை பின்னர் ஸ்வாமிஜி செய்த பிரச்சார முயற்சியின் பின்னர் ஒரு பிஸியான பகுதியாகிவிட்டது.

சாய்பாபாவின் பணி, அற்புதங்கள், அருள்வாக்கு ஆகியவற்றை மக்களிடையே பரவச்செய்யும் பொருட்டு, 1940 ல் சென்னை மாகாணத்தில் அகில பாரத சாய் சமாஜ் நிறுவினார் அப்போது அவருக்கு வயது 66. சாய் பக்தர்களின் இல்லங்களுக்கு அவர் சென்ற போது, அவர் அவர்களிடமிருந்து நிறைய தகவல்கள் சேகரிப்பார். அவர்கள் சொல்வதை பதிவு செய்து கொள்வார். அவற்றைத் தொகுத்து 1940 - 41ல் "சாயி பாபா பக்தர்களின் அனுபவங்கள்" என்ற பெயரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிட்டார். பாபாவின் பணி, அற்புதங்கள், அருள்வாக்கு ஆகியவற்றை தேசம் முழுதும் கொண்டுசென்ற அமர காவியமான வெளியீடு அது.

தாஸ்கணு மஹாராஜ், ராவ் பகதூர் எம்.டபிள்யூ.பிரதானின் 'க்ளிம்ப்ஸ் ஆஃப் ஸ்பிரிசுவாலிடி', அண்ணா சாஹேப் தாபோல்கர் மராட்டியில் இயற்றிய 'சாய் சச்சரிதா' கவிதை நூல் ஆகிய புத்தகங்கள் பாபாவின் செய்திகளை பரப்புவதில் உறுதுணை புரிகின்றன. சுவாமிஜியும் சாய் பாபா பற்றி புத்தகங்கள் எழுதினார். 'பாபாவின் அறிமுகம்' என்பது அவரது முதல் புத்தகம். 1939 ல் வெளியிடப்பட்ட 'சாய் பாபா யார்' என்ற நூலும் அவர் எழுதியதுதான். 'வொன்ட்ரஸ் செயின்ட்', 'சார்ட்டர்ஸ் அண்ட் சேயிங்ஸ்', 'காஸ்பல் ஆப்

ஸ்ரீ சாய் பாபா' ஆகியவை அவர் எழுதிய பிற நூல்கள். 'ஸ்ரீ சாய்நாத் ஸ்மரணம்' சமஸ்கிருதத்தில் அவர் இயற்றியது. இது தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. 1944ல் சுவாமிஜி 'ஸ்ரீ சாய் சரித நாடகம்' என்ற பெயரில் தமிழில் ஒரு நாடகத்தை எழுதினார். அவர் 'ஸ்ரீ சாய் ஹரிகதா' இயற்றி யது சாய் இயக்கத்தை இசைச் சொற்பொழிவுகள் மூலம் பிரபலப்படுத்துவதற்காக.. பின்னர் 1945 ல் 'க்ளிம்ப்ஸஸ் ஆப் சாய் பாபா' எழுதி வெளியிட்டார். இந்த புத்தகங்களைத் தவிர, சாய் பாபா பற்றி அவர் எழுதிய வேறு பல புத்தகங்கள் பல்வேறு இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. சாய்பாபா ஆராதனைக்கான ஒரு திட்டமிட்ட வழிமுறையை உருவாக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். ஏற்கெனவே நடை முறையில் இருந்த 'அஷ்டோத்தர'த்துடன் 'ஸ்ரீ சாய் நாத் பூஜா விதி', 'சாய் சகஸ்ரநாமம்' ஆகியவற்றை எழுதினார். இவை சமஸ் கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டன.

சாய்பாபா இயக்கத்திற்கு மேலும் உத்வேகம் அளிப்பதற்காக, ஆண்டுதோறும் அகில இந்திய சாயி சபைகளை நடத்துவதன் அவசியத்தை அவர் உணர்ந்தார். முதலாவது அகில பாரத சாய் பக்தர்களின்மாநாடு 1946மே மாதத்தில் சென்னை மயிலாப்பூரில் நான்கு நாட்கள் நடைபெற்றது. இருநூறுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் பக்தர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். ஸ்ரீ மல்சபதியின் மகனான ஸ்ரீ மார்த்தாண்ட் மாநாட்டில் இருந்தார்.ஷெனாய் நகரைச் சேர்ந்த ஸ்ரீ கேசவய்யாஜி போன்ற உள்ளூர் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டார்கள். மாநாட்டில் பங்கேற்ற பலர் சாய் பக்தர்களாக தங்கள் அனுபவங்களை விவரித்தார்கள். முதல் அகில பாரத சாய் பக்தர்களின் மாநாட்டுக்குப் பிறகு அடுத்தடுத்த ஆண்டுகளில் மாநாடுகள் நடைபெறலாயின. ஸ்வாமிஜி அற்புதமான சக்திகளைக் கொண்டிருந்தார். பாபாவின் அருளால் அவர் பல நோய்களை குணப்படுத்தினார். சுவாமிஜியின் உடல்நிலையில் சரிவு ஏற்பட்டது. ஸ்ரீ சாய்பாதானந்த ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியும் ஸ்ரீ கேசவய்யாஜியும் அதிகாரபூர்வமாக பின்னர் மாநாடுகளுக்கு தலைமை தாங்கினார்கள்.

1940 ல் சுவாமிஜி 'சாய் சுதா' மாத இதழ் தொடங்கி ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு மொழிகளில் வெளியிட்டார். ஷீரடி திருவிழாக்களின் பாணியில், ஸ்ரீ ராமநவமி, குருபூர்ணிமா, பாபாவின் மஹாசமாதி நாள் ஆகிய மூன்று வருடாந்தர விழாக்களை அவர் சென்னையிலும் பத்து நாள் நிகழ்ச்சியாக நடத்தினார். இந்த நிகழ்ச்சிகளில் பக்தி சங்கீதம், பாடல்கள், சமய சொற்பொழிவுகள் இடம் பெற்றன. ஏழைகளுக்கு அன்னதானமும் உண்டு. அஞ்சல் அட்டை அளவிலான பாபாவின் புகைப்படங்களை இலவசமாக விநியோகிப்பது சுவாமிஜியால் தொடங்கப்பட்டது. அட்டைகள் பாபாவின் உதி பிரசாத் உடன் சேர்ந்து வழங்கப்பட்டன. 1954ல் ஏழைகளுக்காகவும் குடிசைப் பகுதியினருக்காகவும் சாய் இலவச வைத்தியசாலை, நூலகம், சாய் வித்யாலயா பள்ளி ஆகியவற்றைத் தொடங்கினார்.

ஸ்வாமிஜி எழுதிய புத்தகங்களைப் படித்த பாபாவின் பக்தர் பெங்களூரை சேர்ந்த பாப்பைய செட்டி, 1940 ல் ஷீரடியில் ஸ்வாமிஜியை சந்தித்தார். அவரது பணிக்காக ஸ்வாமிஜியிடம் 11,458 ரூபாயை ரொக்கமாக கொடுத்தார். வேறு எதுவும் சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டார். பாபாவின் வழிகாட்டு தலின் படி ஸ்வாமிஜி அந்த தொகையை சாய் பிரச்சாரத்தில் செலவிட்டார். 1949 ல், சமாஜம் புரூடீஸ் சாலையில் இருந்து மைலாப்பூர், அலமேலுமங்கபுரத்திற்கு மாற்றப்பட்டது. பொது மக்கள் நன்கொடை, சாய் நூல்கள் விற்பனை இவற்றைக் கொண்டு முன் மண்டபத்தை நிர்மாணிப்பதற்காக நிதி திரட்டப்பட்டது. அங்கு பாபாவின் படம் நிறுவப்பட்டது, 1952 ஜூலை 7 குருபூர்ணிமா நாளில் ஸ்வாமிஜி பாபா ஆராதனை தொடங்கினார். 1953 ல் ஷீரடியில் உள்ளது போலவே ஒரு கோபுரத்துடன் மந்திர் கட்டுமானம் நிறைவடைந்தது.

1953 ல் ஸ்வாமிஜிக்கு குளியலறையில் கால் வழுக்கிவிட் டது. 1954 நடுப்பகுதி வரை அவர் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த்து. தனது நோயைப் பொருட்படுத்தாமல் அவர் பாபா பற்றிய பிரச்சார சேவையில் எஞ்சிய வாழ்நாளை செலவழிக்க முடிவு செய்தார், தனது 'லைப் ஆப் சாய்பாபா'

என்ற நூலை நிறைவு செய்வதிலேயே அவர் கவனம் குவிந்தது. பாபாவின் கிருபையால் அவருக்கு ஒரு சுருக்கெழுத் தாளர் அளிக்கப்பட்டார். ஒரு சுருக்கெழுத்தாளர் உதவியின்றி, புத்தகத்தை எழுதி முடிக்கவோ 'சாய் சுதா' பத்திரிகையை தொடர்ந்து கொண்டுவரவோ எண்ணற்ற துண்டுப் பிரசுரங் களை வெளியிடவோ அவரால் இயலாமல் போயிருக்கும்.

பின்னர் மாட்சிமை பொருந்திய மைசூர் மகாராஜா 5,000 ரூபாய் நன்கொடை வழங்கினார் அது அச்சகம், அச்சியந்திரம், பிளாக்குகள் ஆகியவை வாங்குவதற்கு சமாஜத்திற்கு உதவிகரமாக இருந்தது., இவ்வாறு ஸ்ரீ சாயி பாபாவின் சரிதத்தை நான்கு தொகுதிகளாக வெளியிட முடிந்தது. ஸ்வாமிஜி வெளியிட்ட புத்தகங்களுக்கோ பிரசுரங்களுக்கோ எவ்வித பதிப்புரிமையும் பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

*ஸ்வாமிஜியின் 83 வது பிறந்த நாள் சென்னை தலைமை யகத்தில் 1956 செப்டம்பர் 12 அன்று கொண்டாடப்பட்டது. பாபாவின் கிருபையால், அவர் சில சக்திகளைப் பெற்றார். அவற்றை பொது மக்களின் நலனுக்காக பயன்படுத் தினார். கடுமையான நோயால் 1956 அக்டோபர் முதல் ஸ்வாமிஜி படுத்த படுக்கையானார். அவரால் எங்கும் போக முடியவில்லை. இருந்தாலும், அவர் தனது படுக்கையிலிருந்தவாறே தனது பிரச்சாரக் பணியைத் தொடர்ந்தார், மற்ற கடமைகளையும் நிறைவேற்றினார். பாபாவை தியானிப்பதற்காக மீதமுள்ள நேரத்தை செல விட்டார். 1956 அக்டோபர் 19 அன்று ஸ்வாமிஜி தனது பூதவுடலை நீத்து பாபாவில் இணைந்தார்.*

பாபாவை நாடறியச் செய்வதில் ஸ்வாமிஜியின் இடைவிடாத முயற்சிகளை அடுத்து சமாதி மந்திர் தரிசனம் செய்ய ஷீரடிக்கு ஏராளமானவர்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கினார்கள். ஸ்வாமிஜி இறையருள் பெற்ற சாது. அவர் இவ்வாறு சமர்த்த சத்குரு சாய் பாபாவிடம் ஈர்க்கப்பட்டது புதிரான சூட்சுமம். பாரத தேசம் முழுவதிலும் மக்களிடையே ஸ்ரீ சாய் பாபாவின் அருட்பணி, அற்புதங்கள், அருள்வாக்குகள் ஆகியவற்றை கொண்டு செல்வதற்காக ஓய்வொழிவின்றி

தீவிரமாக பாடுபடுவதிலேயே தன் வாழ்வின் பிற்பகுதி முழுவதையும் சக்தியனைத்தையும் அவர் அர்ப்பணித்தார்.

பாபாவின் தீவிர பக்தரும் ஷீரடியில் பாபா வாழ்ந்திருந்த காலத்திலேயே பாபாவின் அருள் பெற்றவருமான நீதிபதி எம்.பி. ரெகெ, ஷீரடி சமாதி மந்திரில் பாபாவின் பக்தியில் ஆழ்ந்த அடியார்களின் திருவுருவப் படங்களின் வரிசையில் 1966 ஜனவரி 26 அன்று புனிதர் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். அந்த படதிறப்பு வைபவம் பாபாவின் அருள்வாக்கை பாரதம் முழுவதிலும் ஏன், உலகம் முழுவதிலும் ,திறன்மிக்க வகையில் பரப்பிட அவர் செய்த முயற்சிகளுக்கு அரியதோர் அஞ்சலியாக அமைந்தது. சாய் பாபாவின் அருள் துதராக அவர் பாராட்டப்பட்டார்.

பாரதத்தில் இன்று ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவை அறியாத ஒரு பெருநகரமோ சிறுநகரமோ இல்லை என்றால், ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியின் அபார ஆர்வமும் தன்னலமற்ற சேவையுமே முற்றிலும் காரணம். அவரது பிரச்சாரப் பணி, அவர் எழுதிய / தொகுத்த புத்தகங்கள் ஆகியவை பாபாவின் மகத்துவத்தை புரிந்து கொள்வதற்கான தொடக்கப் புள்ளியாக அமைந்தன. இன்று உலகம் முழுவதிலும் கூட பாபாவின் அருமை பெருமை உணரப்படுகிறது.

மோரேஸ்வர் டபிள்யூ. பிரதான் 1943 அக்டோபர் 9 ஆம் தேதியிட்ட ஒரு கட்டுரையில் ஸ்வாமிஜிக்கு பின்வருமாறு புகழஞ்சலி செலுத்தினார்: "எண்ணற்ற மக்களின் எல்லா அனுப வங்களையும் உள்ளார்ந்த ஆனந்தத்தையும் நாடறியச் செய்வது சாத்தியமற்றது. ஆயினும், முதல் பதிப்பில் இடம்பெற்றுள்ள சாய் பாபாவின் தெய்வத்தன்மை பற்றிய உண்மைகள் ஸ்ரீ பி. வி நரசிம்ம ஸ்வாமியின் பக்திபூர்வமான பிரச்சாரத்தால் பல மடங்கு அதிகமாகப் பரவின. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், கன்னடம், மலையாளம், ஹிந்தி, உருது, குஜராத்தி வங்காளி மொழிகளில் சாய் பாபாவின் தெய்வீகத் தன்மை பற்றிய அவரது எண்ணற்ற வெளியீடுகள் வாயிலாகவும், இந்தியாவின் நீளஅகலங்களில் அவர் தானே மேற்கொண்ட சுற்றுப்பயணங்களாலும், இந்தியாவின் அனைத்து வகுப்பினர், சமூகத்தினர் மத்தியிலும் அந்த அலாதியான அவதாரம் சாய்

பாபா பற்றி தெரியச் செய்தவர் அவர் .......... ".

அகில பாரத சாய் சமாஜத்தில் உள்ள ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜின் காட்டேஜ் அவர் நினைவுக்கு பணிவுடன், அஞ்சலி செலுத்துகிறது.

நாம் அனைவருக்கும் பாபாவின் அருளாசி கிடைக்க பிரார்த்திப்போம்.

# ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி வாழ்வில் மகான்கள்



சிருங்கேரி **ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்**

ஸ்வாமிஜி 1925 ல் வீட்டைவிட்டு வெளி யேறினார். ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமி கள் பிராமண ஸ்வாமியை (பின்னாளில் ஸ்ரீ ரமண மகரிஷி என்று புகழ் பெற்றவர்) போய்ப் பார்க்கும்படி அறிவுறுத்தினார்.

**ஸ்ரீ ரமண மகரிஷி**



ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் சொன்னபடி ஸ்வாமிஜி திருவண்ணாமலை சென்றார். மூன்று ஆண்டுகள் ஒரு குகையில் தங்கினார். வேதாந்தம் பயின்றார். ஸ்ரீ ரமணர் குறித்து - ஆத்ம ஞான விஷயமாக – ஒரு நூலும் எழுதினார்.



**ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமிஜி,** ஹூப்ளி

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி திருவண்ணாமலை யிலிருந்து கர்நாடகாவிலுள்ள ஹூப்ளி சென்றார். அங்கு ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமி யுடன் ஒன்பது மாதங்கள் தங்கினார். சித்தா ரூட ஸ்வாமி 1929ல் சமாதியடைந்தார்.

**பண்டரிபுரம்**




ஸ்வாமிஜி 18 மாதங்கள் பண்டரிபுரத் தில் தங்கினார். அந்த சமயம் அவர் மராட்டி மொழி கற்றுக்கொண்டார். இங்கு பாபு மாய் என்ற பெண் அவதூதரை சந்தித்தார். ஸ்வாமிஜி

அந்த அம்மையை பின்தொடர அவர் என்ன வேண்டும் என்று கேட்க, ஸ்வாமிஜி தன் கடவுளை தேடும் பயணம் பற்றிக் கூற, உனக்கு பசி என்றால் அங்கே நல்ல உணவு கிடைக்கிறது என்று கூறி பாபு மாய் ஒரு மயானத்திற்குள் சென்றார். சாப்பிட்டபின், கடவுளைப் பார்த்தாயா என பாபு மாய் கேட்க, இல்லை என இவர் சொல்ல, பரிமாறியவர்தான் விட்டலர் என்று கூறிய பாபு மாய் அனைத்திலும் விட்டலனைக் காண் என்று அறிவுறுத்தினார்.



## ஜிப்ரு அண்ணா

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜிக்கு தலைவலி தொல்லை தந்து வந்தது. இதுபற்றி ஜிப்ரு அண்ணாவிடம் சொன்னார். அவர் இவரது தலையை நக்கி, உமது புகழ் விண்ணுலகம் வரை பரவும் என்று கூறி அருளாசி வழங்கினார். ஸ்வாமிஜியின் தலைவலி மறைந்த்து. உமது குரு நான் அல்ல என்று ஜிப்ரு அண்ணா தெரிவித்தார்.



## கேட்காம் நாராயண் மஹராஜ்

மெஹர்பாபாவை சந்திக்கும்படி ஸ்வாமி ஜியை அறிவுறுத்தியவர் கேட்காம் நாராயண் மஹராஜ்.




## மெஹர் பாபா, மெஹராபாத், அகமதுநகர்

ஸ்வாமிஜி மெஹர் பாபாவுடன் தங்கிய போது பாபா மௌனத்தில் இருந்தார். உபாசனி மஹராஜின் சீடரான பாபா ஒரு சிலேட்டில் வடக்கு திசை நோக்கி செல்லும்படி எழுதிக் காட்டினார்




**ஹஜரத் பாபாஜான்,** பாவ்டிசார், புணே

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி இந்த அம்மையாரை புணேயில் சந்தித்தார்.



**உபாசனி மஹராஜ், சாகோரி**
(ஷீரடி அருகில்)


ஸ்வாமிஜி 1933 ல் உபாசனி மஹராஜ் இடம் சென்றார். அவரை ஒரு வழக்கிலிருந்து விடுவித்தார். 1936ல் 'செயின்ட் ஆப் சாகோரி' என்ற நூல் எழுதினார். தன் தேடலில் திருப்தி ஏற்படாத நிலயில் ஒரு பட்டாணியர் சொன்னபடி ஷீரடி சென்றார்.



**புஷ்கர் ஏரி**, ராஜஸ்தான்

ஸ்வாமிஜி 1935 நவம்பரில் உபாசனி மகராஜ் வழக்கு விஷயமாக ஒரு சாட்சியை சந்திக்க அஜ்மீர் சென்றார். ஏரியில் குளிக்கும்போது முதலை இவர் காலைப் பிடித்துவிட்டது. தெய்வச் செயலாக ஒரு சர்தார்ஜி முதலையை சுட்டுக் கொன்றதால் பிழைத்தார். மூன்று வாரகாலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். பிறகும் வெகுநாள் வரை சாய்ந்துதான் நடப்பார்.

## பழைய சமாதி மந்திர்



ஸ்வாமிஜி 1936 ஆகஸ்டு 29 அன்று சாய் பாபா சமாதி முன் அமைதியாக வந்து நின்றார்.. மௌன நிலையில் பாபா அவருடன் பேசியது அவருக்கு மட்டற்ற ஆனந்தம் அளித்தது. அவரே தன் சத்குரு என்று உணர்ந்தார்.

# ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி அறிமுகம்

ஸ்வாமிஜி 1943 அல்லது 44 ல் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியை சந்தித்தார். ஸ்வாமிஜிக்கு வாசிப்பில் ஆர்வம் அதிகம். அவர் எழுதியவை இரண்டே நூல்கள். 'லைஃப் ஆப்



ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி – சாய்பாபாவின் அருள்தூதர்' என்ற நிறைவுபெறாத நூல். 'எனது அருமை குழந்தைகளுக்கு' என்பது இன்னொரு நூல்.

1945 முதல் ஸ்ரீராதாகிருஷ்ண ஸ்வாமிஜியை தனது பிரதிநிதியாக ஷீரடி சன்ஸ்தானில் நிர்வாகக் குழு உறுப்பினாராக நியமித்தார் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி. நரசிம்ம ஸ்வாமிஜி மகாசமாதி அடைந்தபிறகு ஸ்வாஜி இந்த பதவியைத் துறந்தார். 1967ல் அகில இந்திய சாய் சமாஜ தலைவராக பொறுப்பேற்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். எஞ்சிய ஆயுள் முழுதும் (14.1.1980 வரை) அந்த பொறுப்பில் இருந்தார்.

தன் குருநாதர் போலவே தனது தகனமும் பொது மயானத்தில் நடைபெற விரும்பினார். பெங்களூரு சாமராஜ்பேட் மயானத்தில் தகனம் நடந்தது. 29 ஆண்டுகள் ஸ்வாமிஜியின் உதவியாளராக இருந்த டி.வி. கிருஷ்ணமூர்த்தி இறுதி சடங்கு செய்தார்.

அஸ்தி ஏழு கலசங்களில் சேகரிக்கப்பட்டது. ஒன்று பெங்களூரு சாய் ஆன்மீக மையத்தில் அவரது சிலையின் கீழ் புதைக்கப்பட்டது. மற்றொன்று அவரது சொந்த ஊரான பொய்யாமணியில் புதைக்கப்பட்டது. ஸ்வாமிஜியின் கட்டுரைகள் 2018 அக்டோபர் வரை 'சாய்பாதானந்த' என்ற காலாண்டிதழில் வெளியாகின. கடும் நோய்வாய்ப்பட்ட ஸ்வாமிஜி சங்கராந்தி நாளில் உடலை விட எண்ணம் கொண்டார் என்பதை பக்தர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவ்வாறே நடந்தது.

ஸ்ரீ சாய்பாதானந்தா

# ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி

(1906 ஏப்ரல் 15 - 1980 ஜனவரி 14)

# மகத்துவத்தின் உருவகம்

*ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி 1956 ல் மகா சமாதி அடைந்தார். தன் அருட்பணியை மேலும் ஊக்கத்துடன் தொடர்வதற்காக அதே தினத்தில் தனது ஆன்மீக சக்திகளை ராதாகிருஷ்ண ஸ்வாமிஜிக்கு மாற்றினார். அதன் பிறகு ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி சாய் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பேற்றார். சென்னையிலும் பெங்களூரிலும் கருவறைகளில் வீற்றிருக்கும் ஸ்ரீசாய் பாபா, ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி ஆகிய மும்மூர்த்திகள், வந்து வணங்குகின்ற பக்தர்கள் உள்ளத்தில் அமைதி, சக்தி, அருள் ஊற்றெடுக்கச் செய்து வருகிறார்கள்.*

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி 1906 ஏப்ரல் 15 அன்று தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டம் பொய்யாமணி கிராமத்தில் ஸ்ரீ புதுக்குடி டி. வெங்கடராம ஐயர் - சி.எம். லட்சுமி அம்மாள் தம்பதியின் ஐந்தாவது மகவாகப் பிறந்தார். சிறு பிராயத்திலேயே, ராதாகிருஷ்ணனுக்கு சமய, ஆன்மீக சூழ்நிலையில் வளரும் வாய்ப்பு கிடைத்தது. இயற்கை எழிலை ரசிப்பது அவருக்கு மிகவும் பிடிக்கும்.

மகான்களையும் புனிதர்களையும் சந்திப்பதில் அவர் ஈடுபாடு கொண்டார். பல்வேறு தலங்களுக்கு சென்று ஆலய தரிசனம் செய்தார். சமய, ஆன்மீக விஷயங்களை சொல்லும் நூல்களைப் படிப்பதில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. ராகவேந்திர சுவாமி, சதாசிவ பிரம்மேந்திரர், சைதன்ய மஹாபிரபு போன்ற மேன்மக்களின் மகத்துவத்தை போற்றும் சரிதைகள் படித்தறிந்தார். திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமண மகரிஷியையும் சேஷாத்ரி சுவாமிகளையும் தரிசித்தார். சேஷாத்ரி சுவாமிகள் அவருக்கு மூன்று கற்களை கொடுத்து அவற்றை சமைத்து உண்ணச் சொன்னார். சத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களையும் கடந்து குணாதீத நிலைக்கு உயர வேண்டும் என்பது அதன் மறைபொருள் என்பது ரமணர் தந்த விளக்கத்தால் ராதாகிருஷ்ணனுக்கு விளங்கியது.

காஞ்சி காமகோடி பீடம் சங்கராச்சாரியாரை அவர் பலமுறை தரிசித்தார். பள்ளிப் படிப்பில் ராதாகிருஷ்ணனுக்கு நாட்டம் இல்லை. அதை பாதியிலேயே விட்டு விட்டார் ஆன்மீக ஞானம் கைவரப் பெற வேண்டும் என்பதில் அந்த ஈடுபாடு கொண்டவராக இருந்தார். அவரது குடும்பம் வசதியான குடும்பம். எனவே வேலை தேடி பிழைப்புக்கு வழி செய்து கொள்ள வேண்டும் என்ற தேவை இருக்கவில்லை.

ராதாகிருஷ்ணன் மனதில் காஞ்சி சங்கராச்சாரியாரின் ஆழ்ந்த தாக்கம் நிலவியது. ராதாகிருஷ்ணனின் ஒரு சகோதரர் பூனாவில் வகித்தார். அவர் வீட்டுக்குச் சென்று தங்கிய போது ராதாகிருஷ்ணன் பல தலங்களைத் தரிசித்தார். ஆன்மீக முன்னேற்றத்திற்காக மகான்களுடன் அவரது தொடர்பு நீடித்தது. மும்பை, பூனா சுற்றுவட்டாரத்தில் உள்ள திருத் தலங்களுக்கு அவர் சென்றபோது ஆன்மீக சாதனா செய்வதற்கு பொருத்தமாக பல குகைகள் இருப்பதைக் கண்டார். ஒரு குகையில் அமர்ந்து 48 நாட்கள் தியானத்தில் ஆழ்ந்தார். அந்த காலகட்டத்தில் அவருக்கு ஸ்ரீ தத்தாத்ரேயர் தரிசனம் கிடைத்தது. உலக வாழ்க்கையில் இருந்தபடியே அருள் பணியை தொடரும்படியும் மக்களுக்கு நன்மை செய்யும் படியும் தத்தாத்ரேயர் அறிவுறுத்தினார்.

ராதாகிருஷ்ணன் 1921ல் ஊட்டிக்கு வந்தார். அடுத்த 20 ஆண்டுகள் அங்கேயே வசித்தார். அவருக்கு 21 வயதாகியிருந்த போது திருமணம் செய்து கொள்ளும்படி குடும்பத்தார் அவரை வற்புறுத்தினார்கள் அவருக்கோ திருமணத்தில் பெரிதாக நாட்டம் ஒன்றுமில்லை. எனினும் வீட்டாரின் வற்புறுத்தலுக்கு இணங்கி தனது தாய் வழி உறவினரான பார்வதியை திருமணம் செய்து கொண்டார்.

அடுத்து ஊட்டி ரேஸ் கிளப்பில் ஸ்டூவர்ட் வேலையில் சேர்ந்தார். பதவிக்கு பொருத்தமாய் மிடுக்குடன் தென்பட வேண்டும் என்பதற்காக அவர் முறையான உடை அணிய வேண்டி இருந்தது. அங்கே வேலை செய்த நாட்களில் நவீன பாணி உடை அணிந்த இளைஞர் போன்று காட்சி யளித்தார். அந்த நாட்களில் அவர் மூத்த ஐரோப்பிய அதிகாரிகளுடனும் சமுதாய உயர்மட்ட பிரமுகர்களுடனும் பழக வேண்டி இருந்தது. இவ்வாறு அவரது நட்பு வட்டத்தில் மிக முக்கியமானவர்கள் இடம் பெற்றார்கள்.

அவர் தன் தமையனாருடன் தங்கியிருந்த நாட்களில் இருவரும் வெகு நேரம் நடைப்பயிற்சி செய்வார்கள். அப்போது ஆன்மீக விஷயமாக மணிக்கணக்கில் விவாதிப்பார்கள். அவரது குடும்பத்தாரும் உறவினர்களும் சேர்ந்து ஒரு சிவன் கோயில் கட்டி இருந்தார்கள். அங்கே தினமும் ராதாகிருஷ்ணன் சிறிது நேரம் செலவிடுவார். பஜனை வேளைகளில் தன்னையே ராதையாக, ஆண்டாளாக பாவித்து பரவசமாகி ஆடிப் பாடுவார். அவருக்கு சங்கீதத்தில் ஈடுபாடு உண்டு. தியாகராஜர் கீர்த் தனைகளையும் புரந்தரதாஸர் கீர்த்தனைகளையும் பாடுவார். அவர் ஜோதிடக் கலையிலும் ஆர்வமுள்ளவராகத் திகழ்ந்தார்

1927ல் ஊட்டியில் பேத் பகுதியை சேர்ந்த நாராயண் மகராஜ் இவருக்கு ‘தத்த’ மந்திரத்தை உபதேசித்தார். வாசிப்பில் அலாதி பிரியம் உள்ள அவர் சென்னை அடையாறு தியசாபிகல் சொசைட்டி நூலகத்திற்கு அடிக்கடி செல்வார். இடைவிடாமல் தியானப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தார். வாழ்நாளெல்லாம் அவருடன் இணைபிரியாமல் இருந்து வந்த ’மந்திர மஹோததி’ என்ற நூலை அவர் சதா படித்து வந்தார்.

1936-42 ல் அவர் வாழ்வில் மனரீதியாக கடும் நெருக்கடி தலைதூக்கியது. திருச்சியிலிருந்து சென்னைக்கு ரயிலில் பயணம் செய்த போது தற்கொலை செய்து கொண்டு விடலாமா என்ற எண்ணம் கூட அவருக்கு ஏற்பட்டது. சிதம்பரம் அருகே கொள்ளிடத்தை ரயில் கடக்கும் போது நதியில் குதித்து தற்கொலை செய்து கொள்வதற்காக ரயில் கதவை திறந்தார். யாரோ தன்னை பின்னாலிருந்து இழுத்துப் பிடிப்பது போல இருந்தது. திரும்பி பார்த்தால் 'உன் வாழ்வில் நீ செய்து முடிக்க வேண்டிய அரும்பணி ஒன்று உண்டு. எனவே இது போல செய்யாதே' என்று முண்டாசு கட்டிய முதியவர் ஒருவர் இவரை அறிவுறுத்தினார். அவர் பாபாதான் என்று பின்னாளில் ராதாகிருஷ்ணன் உணர்ந்து கொண்டார்.

1942ல் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜியை எதிர்பாராத விதமாக அவர் சந்திக்க நேர்ந்தது. ஒரு 'குரு' வை தேடிய அவரது பயணம் அத்துடன் நிறைவு பெற்றது. பாபாவின் தீவிர பக்தரானார். நாளாவட்டத்தில் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜியின் ஆன்மீக வாரிசானார்.

சென்னையில் இருந்தபோது ராதாகிருஷ்ணன் அகில பாரத சாய் சமாஜ கணக்குகளை மேற்பார்வையிட்டு வந்தார். நரசிம்ம ஸ்வாமிக்கு பல்வேறு விதங்களில் உதவி புரிந்து வந்தார். அவர் ஒருபோதும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டதில்லை. எளிமையான சுபாவம் கொண்ட அவர் ஆடம்பரத்தையும் விளம்பரத்தையும் எப்போதும் தவிர்த்து வந்தார். தன்னை பற்றி எதுவும் சொல்லிக் கொள்வதில்லை. புகைப்படம் எடுப்பதற்கு கூட அவர் முகம் காட்டியது இல்லை. சாய் சமாஜ பிரச்சாரத்திற்காக அவர் பல வட மாநிலங்களுக்கு சென்று வந்தார். அகில பாரத சாய் சமாஜம் உயிர்ப்புடன் செயல்படுவதற்கு அவர் நரசிம்ம ஸ்வாமிக்கு உதவினார். ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியை தனது குருவாக ஏற்றுக்கொண்ட அவர் அவரிடம் பரிபூரணமாக சரணடைந்தார். நரசிம்ம ஸ்வாமி சொற்களே அவருக்கு சட்டமாயிற்று. ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அகில பாரத சாய் சமாஜத்தின் சென்னை துணைத் தலைவரானார்.

கர்நாடகா மாநிலத்தில் சாய் பிரச்சார் பணிக்காக 1952 ல் ராதாகிருஷ்ணனை பெங்களூருக்கு அனுப்பி வைத்தார்

ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி. பெங்களூரு கன்டோன்மென்ட் பகுதியில் பல சாய் பக்தர்கள் இருப்பதை அறிந்த ராதகிருஷ்ணன் கன்டோன்மென்ட்டில்சிறு அலுவலகம் அமைத்துக்கொண்டார். பிறகு அவர் என்.ஆர்.காலனி பகுதியில் பேருந்து நிறுத்தத்தின் அருகே ஒரு வீட்டின் மாடியில் அறை எடுத்துக்கொண்டு தங்கினார். பிற்காலத்தில் அது 'சாய் ஆன்மீக மைய'த்தின் பீடம் ஆயிற்று. மையத்திற்காக என்று நிரந்தர கட்டிடம் கட்டப்படும் வரை ராதாகிருஷ்ணன் 7 ஆண்டுகள் அங்கு தங்கினார்.

எப்போதாவது பெங்களூரு வரும் தனது குருவை அவர் சந்தித்து வந்தார். 1953 ல் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி அவருக்கு 'சாய்பாதானந்தா' என்ற பட்டம் அளித்தார் இதையடுத்து ராதாகிருஷ்ணன் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமி ஆனார். பாபாவிடம் மாறாத பக்தியும் குருநாதரிடம் நேர்மையான அடிபணிதலும் நிறைந்த அவருக்கு குருநாதரின் பாராட்டாக இது அமைந்தது.

1954 ஏப்ரலில் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி பசவனகுடி சௌத் என்ட் தெருவில் சாய் பஜன் குழுவினரின் ஸ்ரீராமநவமி உற்சவத்தை துவக்கி வைத்தார். அதுவே சாயி ஆன்மீக மையத்தின் துவக்கப் புள்ளியாக அமைந்தது. அவரது உணவுத் தேவையைப் பொறுத்த வரை பக்தர் தன்மையுள்ள மக்கள் அவருக்கு உணவளித்து உண்டு. எத்தனையோ நாள் அவர் உணவு இல்லாமலும் இருந்தது உண்டு. சனிக்கிழமை தோறும் சாய் பிரச்சார் பணிக்காக அவர் தும்கூர் சென்று வந்தார்.

பாபாவின் அருள் உந்துதலால் ஓய்வு பெற்ற அரசு அதிகாரி தோம்லூர் கிருஷ்ணமூர்த்தி (ஓய்வு பெற்ற துணை கண்ட்ரோலர்) பெங்களூர் தியாகராஜ நகர பகுதியில், பாபாவின் போதனைகளையும் அருட்பணியையும் பரப்புவதற்காக ஒரு கட்டிடம் எழுப்பும் பொருட்டு ஆயிரம் சதுர கஜம் பூமியை அர்ப்பணம் செய்திருந்தார். வி.எஸ்.சாஸ்திரி பொறுப்பிலிருந்து வந்த அந்த நிலம் 1961ல் பவித்திரமான குரு பூர்ணிமா அன்று மையத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. பாபாவின் அருளால் ஸ்ரீ பாய் படேல் என்ற குஜராத்தி வர்த்தகர் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமியை சந்தித்து கட்டிடத்தை நிர்மாணிக்க நிதி அளித்து உதவினார். ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியின் திறன் மிக்க தலைமையின்

கீழ் சாய் ஆன்மிக மைய நிகழ்ச்சிகள் கண்டு மனநிறைவு அடைந்தவராக ஸ்ரீ சாஸ்திரி சிறிது நிதி சேகரித்து தந்தும் உதவினார். எனவே, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமி இரண்டு அறைகளும் பிரார்த்தனை மண்டபமும் கொண்ட கட்டிடத் திற்கான அஸ்திவாரத்தை விரைவாக அமைக்க வேண்டி இருந்தது. அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கான நிதி எவரும் முயற்சி செய்யாமலே நாடு முழுவதிலும் இருந்து பக்தர்களிடமிருந்து வந்து சேர்ந்தது.

ஆன்மீக மைய கட்டிடத்தை 1965ல் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி முறைப்படி துவக்கி வைத்தார். பிரதான மண்டபத் தில், ஸ்ரீ.எஸ் துரைசாமி நன்கொடையாக வழங்கிய அருள் பொங்கும் ஸ்ரீ ஷீரடி சாய்பாபாவின் ஆளுயர பலவண்ண அழகிய திருவுருவப்படம், 1967 ஏப்ரல் 27 அன்று அப்போதைய கர்நாடகா மாநில ஆளுனர் வி.வி. கிரி முன்னிலையில் ஸ்ரீமதி சரஸ்வதி பாய் கிரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 'ஸ்ரீ சாய் ஆன்மீக மையம்' 1979 ல் 'மைசூர் சொசைட்டிகள் பதிவு சட்ட'த்தின்படி பதிவு செய்யப்பட்டது. ஸ்ரீ ஹர்ஷத் படேல் வழங்கிய கண்கவரும் ராதாகிருஷ்ணர் சிலை ஒன்று 1972ல் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியால் மைய வளாகத்தில் நிறுவப்பட்டது. 1978ல் மையத்தின் வெள்ளி விழாவின் போது ஸ்ரீ சாய் பாபாவின் மகா சமாதி அறுபதாவது ஆண்டு நிறைவையொட்டி பளிங்கால் (மார்பிள்) ஆன ஆளுயர ஸ்ரீ பாபா சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி 1956 அக்டோபர் 19 அன்று மகா சமாதி அடைந்தார். அந்த பவுர்ணமி தினத்தன்று அவர் தமது ஆன்மிக சக்திகளை எல்லாம், தான் செய்து வந்த அருட்பணியை மேலும் ஊக்கத்துடன் தொடர்வதற்காக ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியிடம் மாற்றிக் கொடுத்தார்.

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி 1970 முதல் சென்னை அகில பாரத சாய் சமாஜ் பணிகளை அதன் தலைவராக இருந்து கவனித்துக்கொண்டார். அதைப் போல பெங்களூரு தியாகராஜ நகர மந்திரையும் நிர்வகித்து வந்தார். குரு பூர்ணிமா, மகாசமாதி நாள் போன்ற விசேஷ நாட்களில் இரண்டு ஊர் விழாக்களிலும் கலந்து கொள்வதற்கு பெங்களூருக்கும் சென்னைக்கும்

இடையே போய்விட்டுப் போய்விட்டு வருவார். அதனால் சில சமயம் காரிலும் சில சமயம் விமானத்திலும் பயணிப்பார். சென்னை அகில பாரத சாய் சமாஜ் தலைவர் என்ற முறையில் சென்னையின் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் மகாராஷ்டிராவிலும் பலப்பல பாபா கோயில்களை நிர்மாணிப்பதில் முக்கிய பங்கு வகித்தார். 1978 ல் பூனா நகரில் அகில பாரத சாய் பக்தர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தினார்.

அகில பாரத சாய் சமாஜ வளாகத்தில் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜியின் நூற்றாண்டு வருடத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காட்டேஜ் ஒன்றை நிர்மாணித்தார்.

இடைவிடாத நாம ஜபமும் விஷ்ணு சகஸ்ரநாம பாராயணமுமே எல்லாவற்றுக்கும் தீர்வு என்பது ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி கருத்து. பிரச்சனைகள் எல்லாவற்றிலிருந்தும் விடுபடவழி காண்பதற்கு ஒவ்வொரு நாளும் இவற்றை எத்தனை முறை வேண்டுமானாலும் ஜெபிக்கலாம் என்பார் அவர். நாள்தோறும் பகவத் கீதையிலிருந்து ஒரு அத்தியாயத்தை பாராயணம் செய்ய வேண்டும் என்று பக்தர்களுக்கு அவர் அறிவுறுத்துவார். சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்த அவர் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி பற்றி நூல் ஒன்று எழுதினார். 1936 ல் வாழ்ந்திருந்த (பாபாவை சந்தித்திருந்த) அரிய பக்தர்களை சந்தித்து அவர்களின் அனுபவங்களை தொகுத்து நூல் வெளியிட்டவர் ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி. அதுமட்டுமல்ல, பாரத நாடு நெடுக எத்தனையோ பேருக்கு பாபாவின் ஜீவிதம், அருட்பணி, அற்புதங்கள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதில் முக்கிய பங்கு ஆற்றியவர் அவர். பாபா பற்றிய நூல்கள் மராட்டி மொழியில் எழுதப்பட்டிருந்தன. அவற்றைப் படித்து அறிந்துகொள்வதற்காக ஸ்ரீ நரசிம்ம சுவாமிஜி மராட்டி மொழி கற்றுக் கொள்ளும் அளவுக்கு ஈடுபாடு கொண்டவராகத் திகழ்ந்தார்.

தினமும் இரவு நேரத்தில் மந்திரில் பஜனை சஹஸ்ரநாம பாராயணம் முடிந்த பிறகு ஆசியுரை இடம்பெறும். அது குஜராத்தில் துவாரகைக்கு அவர் சென்றபோது தெய்வீக பரவச நிலையில் அருளப்பட்ட ஆசியுரை ஆகும். அந்த ஆசியுரை வாசகம் பின்வருமாறு:

தீயோர் நல்லோர் ஆகட்டும் ;
நல்லோர் அமைதி பெறட்டும்;
அமைதி பெற்றவர்கள் எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபடட்டும்;
விடுபட்டவர்கள் மற்றவர்களை கைதூக்கி விடட்டும்;
எல்லோரும் ஆனந்தமாக இருக்கட்டும்;
எல்லோரும் நோய் அற்றவர்கள் ஆகட்டும்
எல்லோருக்கும் நல்லதிர்ஷ்டம் வாய்க்கட்டும்;
எவரும் தீய வழியில் செல்லாது இருக்கட்டும்;
ஒவ்வொருவரும் கஷ்டங்களை வென்றுவரட்டும்;
ஒவ்வொருவரும் நல்ல பாக்கியங்கள் அடையட்டும்;
ஒவ்வொருவருக்கும் கனவு நனவாக்கட்டும்
ஒவ்வொருவரும் எங்கெங்கும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்.

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி நிறை வாழ்வு வாழ்ந்தார். வாழ்நாளெல்லாம் அருட்பணியில் மூழ்கினார். பாபாவின் அருட்பணியை பிரச்சாரம் செய்த படி பயணம் செய்து வந்தார். எந்நேரமும் அவர் பாபாவுடன் அருள் தொடர்பு கொண்டிருந்தார் பாபா அருளிய ஊக்கத்தின் படி அவரது செய்கை ஒவ்வொன்றும் அமைந்தது. ஒருமுறை அவர் ஷீரடி சென்ற போது பொதுமக்களின் நலனுக்கான எஞ்சிய அவரது அருட்பணிகள் நிறைவேறுவதற்காக அவர் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று பாபாவால் ஸ்வாமிஜி கேட்டுக்கொள்ளப்பட்டார் .


பெங்களூரில் ஆன்மீக மையத்தில் ஸ்வாமிஜி சத்சங்கம் நடத்துவார். அப்போது நாள்தோறும் பகவத் கீதை பாராயணம் நடைபெறும். அவரும் பகவத் கீதை ஸ்லோகங்கள் பாராய ணம் செய்வார் பக்தர்களின் நன்மைக்காக அவற்றை மொழி பெயர்த்தும் சொல்லுவார். ராம நாமத்தின் ஆற்றலை ஸ்வாமிஜி பக்தர்களுக்கு விவரித்துச் சொல்வார். ராம என்னும் மந்திரம் தாரக மந்திரம், ஜெபிப்பவர் சம்சார சாகரத்தை தாண்ட அது உதவும். பக்தர்களுக்கு பல சந்தர்பங்களில் அருளாசி வழங்கி னார். அவர் சாதுவாகத்தான் இருப்பார். பக்தர்களுக்கு வழங்கும் அருளாசி திறன்மிக்கதாக, சக்தி வாய்ந்ததாக விளங்கியது.

ஸ்வாமிஜி தனது உடலை உதறி பாபாவுடன் ஐக்கிய மாவதற்கு உத்தராயண புண்ணிய காலத்திற்காகக் காத் திருந்தார். 1980 ஜனவரி 14ம் தேதியை அவர் பாபாவுடன் ஐக்கியமாவதற்கு என குறித்திருந்தார். அன்றைய தினம் அவர் பக்தர்களுடன் சேர்ந்து விஷ்ணு சகஸ்ரநாம பாராய ணம் செய்தார். "ஓம் நமோ நாராயணாய" என்று ஜெபித்தார். இறுதி நொடி வரை நினைவுடன் இருந்தார். 1980 ஜனவரி 14 அன்று இரவு நேரத்தில் பூத உடலை நீத்தார். மறுநாள் வேத கோஷம் முழங்க முழு மரியாதையுடன் தகனம் நடைபெற்றது.

சுவாமிஜியின் அருளை பக்தர்கள் ஆன்மீக ரீதியாகவும் உலகியல் ரீதியாகவும் அனுபவித்தார்கள். அவர் சரீரத்தை விட்ட பிறகும் கூட அவரது அருளை பக்தர்கள் இன்னும் தொடர்ந்து அடைந்து வருகிறார்கள். அவர் சரீர ரீதியாக கண் எதிரே இல்லை என்றாலும் பக்தர்கள் கஷ்டத்தின் போதும் தேவையின் போதும் அவரது ஆன்மீக சான்னித்தியத்தையும் வழிகாட்டலையும் உணர்கிறார்கள். ஸ்வாமிஜி பல பக்தர்களின் கனவில் தோன்றி அவர்களின் பிரச்சினைகளுக்கு வழி சொல்லி ஆன்மீகத்தில் அவர்களை ஊக்குவிப்பது உண்டு. வழிகாட்டும் அவரது திருக்கரங்களும் அன்பு பொழியும் அவரது பார்வையும் பக்தர் ஒவ்வொருவரின் இல்லத்தின் மேலும் வியாபித்து, "நான் இருக்கிறேன் ஏன் அச்சம்?" எனும் பாபாவின் அருள்வாக்கை நினைவூட்டிய வண்ணம் இருக்கின்றன.

ஸ்ரீ சாய் பாபா, ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜி, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி ஆகிய மும்மூர்த்திகள் எல்லா பக்தர்களுக்கும் அமைதியை, சக்தியை, ஆனந்தத்தை வழங்கி வருகிறார்கள்.

# ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி வாழ்வில் மகான்கள்



### காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவா

காஞ்சி காமகோடி பீடம் மஹாபெரியவா ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். ஸ்வாமிஜி பல முறை அவரை சந்தித்தார். அவரது தம்பி காஞ்சி மடத்தில் பணியாற்றி வந்தார். அவரது இளம் வயதில் மஹாபெரியவா ஸ்வாமிஜி சொநத ஊரான பொய்யாமணி சென்றிருக்கிறார்.



### சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜிக்கு சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிஜி காஷாய வஸ்திரம் அளித்தார். ஆனால் அவர் ஒருபோதும் அதை அணியவில்லை, அது தனக்கு கிடைத்த அருளாசி எனப் போற்றி வந்தார். அவரது சிறு வயதில் அவரது பிறந்த ஊரான பொய்யாமணி கிராமத்திற்கு ஆசார்யர் சென்றது உண்டு..



### கேட்காம் நாராயண் மஹராஜ்

ஊட்டி நகரத்தில் 1927 ல் ராதாகிருஷ்ண ஸ்வாமிஜிக்கு கேட்காம் நாராயண மஹராஜால் தத்த மந்திரம் உபதேசிக்கப்பட்டது.

## ஸ்ரீ ரமண மகரிஷி



அவர் திருவண்ணாமலை ஸ்ரீ ரமண மகரிஷியை தரிசித்தார்.



## ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்

திருவண்ணாமலையில் ரமண மக ரிஷியையும் சேஷாத்ரி ஸ்வாமி களையும் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி சந்தித்தார். பிந்தையவர் ராதாகிருஷ்ணன் மூன்று கற்களைக் கொடுத்து அவற்றை சமைத்து சாப்பிடச் சொன்னார். "சத்வ", "ரஜஸ்", "தமஸ்" ஆகிய குணங்கள் கடந்து "குணாதீதர்" ஆக வேண்டும் என்று முந்தையவர் இதை விளக்கினார்.

## ரிஷிகேஷ் ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தர்



ரிஷிகேஷ் ஸ்ரீ ஸ்வாமி சிவானந்தருக்கு ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜியைப் மிகவும் பிடிக்கும். அவர் 1950 ல் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியை தன் தெய்வீக வாழ்க்கை சங்கத்தில் இணையும்படிக் கூறியதுண்டு.




## குப்பி சிதாம்பர ஸ்வாமி

குப்பி (கர்நாடகா) சிதாம்பர ஸ்வாமிக்கு ஸ்வாமிஜி மீது பெருமதிப்பு உண்டு. 1956 ல் குப்பி ஸ்வாமிக்கு ஆயுள் நீட்டித்து அருளுமாறு ஸ்வாமிஜி பிரார்த்தித்துக் கொண்டார். குப்பி ஸ்வாமி. 1967 வரை வாழ்ந்திருந்தார்.



**ஸ்ரீ ஆனந்தமயி மா**

சாய் பிரசார் நாட்களில் முதன்முதலில் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி மாதாஜியை சந்தித்தார். மாதாஜியும் 1979 ல் பெங்களூரில் ஸ்வாமிஜியை சந்தித்தார். அதுவே மாதாஜி கடைசி முறையாக பெங்களூர் வந்தது.



**ஷிமோகா ஸ்ரீ ஸ்ரீதர் சுவாமிஜி**

ஸ்ரீ ஸ்ரீதர் சுவாமிஜி 2 நாட்களுக்கு மேல் எந்த இடத்திலும் தங்காதவர். அவரை ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி அடிக்கடி சந்திப்பார். தன் சஞ்சாரத்திடையே 1973 ல் பெங்களூரு வசந்தபுரா என்.ஆர். காலனிக்கு ஸ்ரீதர் சுவாமிஜி வந்தார். அவர் 1973 ல் அமரரானார்.



**புணே சாது வாஸ்வானி**

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமி தனது புணே தொடர்புகள் வாயிலாக சாது வாஸ்வானியுடன் நெருங்கிப் பழகினார்.



**பெங்களூர் ஸ்ரீ சிவ பாலயோகி**.

அவரது பெங்களூரு ஆஸ்ரமத்தில் சிவபால யோகியுடன் அடிக்கடி கலந்துரையாடுவார் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி.



**ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியுடன்**

ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமி 1942 இல், எதிர்பாராத சூழலில் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியை சந்தித்தார்.

குருவுக்கான அவரது தேடல் அன்று நிறைவடைந்த்து. பாபாவின் பக்தரானார்.. பின்னர் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிக்கு ஆன்மீக வாரிசு ஆனார்.




## ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி ஜி

தனது குரு ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமிஜியை சந்தித்த பிறகு சாய் பிரசார் பணியில் ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமி முழுமூச்சில் ஈடுபட்டார். அகில பாரத சாய் சமாஜின் துணைத் தலைவராகி வாழ்நாள் முழுதும் அந்தப் பொறுப்பு வகித்தார்.

# ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி அறிமுகம்

ஷீரடியிலேயே 40 ஆண்டு களுக்கு மேலாக தங்கியிருந்து சாய்பாபாவுக்கு சேவை செய் தவர் சிவநேசன் ஸ்வாமிஜி. குருஸ்தான் துவாரகாமயி, சாவடி, ஆகியவை இவரது பக்தி மயமான சேவைக்கு மையங்கள் ஆயின.



பக்தர்கள் மூலமாக உலகம் முழுவதிலும் சாய் மந்திர்கள் எழுப்பிட ஸ்வாமிஜி கருவியாக விளங்கினார்.

நாம ஜெபம் செய்வது, நந்தா தீபத்திலும் குருஸ்தானிலும் பிரதக்ஷிணம் செய்வது இவற்றை ஊக்குவித்தார். நூல் எழுதவும். நூல்களை மொழிபெயர்க்கவும் பக்தர்களை தூண்டினார்.

தினமும் இரவு 8 மணிக்கு பஜனை பாடுவார். அவர் உடல்நிலை நன்றாக இருந்த வரை இந்தப் பழக்கம் தொடர்ந் தது. தேங்காய் சமர்ப் பித்து துவாரகாமயி 'துனி பூஜா' செய்வார். உணவு கூப்பன்களை தேவையானவர்களுக்கு வழங்குவார்.

1996 பிப்ரவரி 12 திங்களன்று நள்ளிரவு கடந்து பத்து நிமிடங்களுக்குப் பிறகு உடலை நீத்து பாபா திருவடி அடைந்தார். அப்போது துவாரகாமயி விளக்குகள் அசைந்தாடியது அதற்கு அறிகுறி என பக்தர்கள் நம்புகிறார்கள்.

அவரது நெருங்கிய பக்தராக இருந்த மணி அக்னி கொடுத்தார். பிப்பல்வாடி சாலையில் தகனம் நடந்த இடத்தில் அவரது அஸ்தி கலசம் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதி சடங்கு நடந்தபோது சன்ஸ்தான் புனிதநீர், சமாதி மந்திரிலிருந்து மாலை ஆகிய வற்றை அளித்து கௌரவித்தது. இறுதி ஊர்வலத்தில் பாபா சான்னித்யம் நிலவியது. தகனம் நடந்த இடத்தில் ஸ்வாமிஜியின் இன்னொரு நெருங்கிய நண்பர் சியாராம் இரவு முழுதும் அமர்ந்திருந்தார்.

# ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி

(1927 ஏப்ரல் 27 - 1996 பிப்ரவரி 12)

# சாய் நாமஜெபத்தின் ஊற்றுக்கண்

*இவர் நாம ஜபத்தை அறிமுகப்படுத்தினார். "ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெய ஜெய சாய்!" என்று பக்தர்கள் குழுக்களாக ஜெபிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். குருஸ்தான், நந்தா தீப், தத்த மந்திர் ஆகிய இடங்களில் பிரதக்ஷிணம் செய்வது உங்களுக்கு நல்லது என்று பக்தர்களுக்கு அறிவுறுத்தினார். ஷீரடியில் ஸ்வாமிஜி வாழ்ந்திருந்த சுமார் 45 ஆண்டுகளில் அவர் பாபாவின் தலை சிறந்த தூதுவராக உருவானார்.*

**சி**வநேசன் ஸ்வாமிஜி 1927 ஏப்ரல் 27 அன்று ஸ்ரீ ராமநவமி நன்னாளில் கோயம்புத்தூர் மாவட்டம் நாயக்கன்பாளையம் கிராமத்தில் ஸ்ரீமதி அலமேலு - ஸ்ரீ முத்தையா தம்பதிகளின் மூன்றாவது, கடைசி குழந்தையாக பிறந்தார். பிறப்பிலேயே அவருக்கு ஸ்ரீ ராமபிரானின் அனுக்கிரகம் இருந்தது. குழந்தை பிறக்கும் போது இரண்டு பற்களுடன் இருந்தது. தலையில் சடையுடன் பிறந்ததால் இந்தக் குழந்தை இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் துறவி ஆகும் என்று ஜோதிடர்கள் கணித்துச் சொன்னார்கள். சிறு வயதிலிருந்தே இவர் உள்முகமாக திரும்பி, உலகியல் விவகாரங்களில் இருந்து விலகி, அமைதியாக தியானத்தில் ஈடுபட்டார். சில சமயம் உணவைக் கூட மறந்து விடுவார். அவருக்கு தனிமை மிகவும் பிடிக்கும். தன் தாய்வழிப் பாட்டியார் வீட்டில் பல காலம் மகிழ்ச்சியுடன் செலவிட்டார். பாட்டியார் பற்றி பலப்பல சம்பவங்களை நினைவுகூர்வார். தன் தந்தையாரின் சகோதரர் வீட்டில் தனக்கு மிகவும் விருப்பமான புத்தகங்கள் நிறைய இருந்ததால் அவரையும் மிகவும் பிடிக்கும்

என்பார். அவர் படித்தது எட்டாவது வகுப்பு வரை தான். வசதியான குடும்பம் தான் என்றாலும் மேற்கொண்டு படிப்பில் அவருக்கு நாட்டம் செல்லவில்லை. அவரது ஞாபகசக்தி அபாரம். ஆரம்பத்தில் நாத்திகராக இருந்த அவர் பின்னாளில் பாபாவின் பக்தர் ஆனார்.

பின்னர், அவர் ஒரு குறுகிய காலத்திற்கு தற்காலிக அடிப்படையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் பதிவு அறை உதவியாளராகப் பணியாற்றினார். கோயம்புத்தூரில் மின்சார துறையிலும் தினசரி ஊதியம் பெறும் பணியாளராகவும் வேலை செய்தார். மிகக் குறைந்த வயது. உண்மையில் அவர் வயதுக்கு அந்தப் பணிபுரியத் தகுதியற்றவர்., மேற்பார்வை அதிகாரிகள் சோதனையிட வரும்போது அருகில் உள்ள வயலில் ஒளிந்து கொள்வார். புத்தகங்கள் வாசிப்பதை நேசிப்பவர் என்பதால் புத்தக விற்பனை உதவியாளராகப் பணியாற்றினார். அது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் புத்தகங்களை விற்பனை செய்வதைவிட புத்தகங்களை வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டியதால், அந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

அவரது தாயார் இறந்தபின், அவர் தனது வீட்டை விட்டு வெளியேறினார். பிறகு தனது சொந்த ஊருக்குத் திரும்பவில்லை. ஆன்மிக விஷயங்கள் கற்க நிறைய ஆர்வம் வளர்த்துக் கொண்டிருந்தார். ஊர் ஊராகச் சென்ற அவர் 17ம் வயதில் 1944 ம் ஆண்டில் பம்பாய் (மும்பை) அடைந்தார். தனது வாழ்வாதாரத்திற்காக பலப்பல வேலைகளை செய்தார். ஒரு ரயில் நிலையத்தில் போர்ட்டராகவும் பணியாற்றினார். தியானம் செய்வதில் நாட்டம் அதிகம். கடற்கரைப் பகுதியில் அவர் தியானம் செய்வதுண்டு.

பின்னர் அவர் முத்தையா ஸ்வாமியை சந்தித்தார். அவரும் கோயம்புத்தூர் மாவட்டத்துக்காரர். அவர் இல்லறத்தார் என்றாலும், ஸ்வாமிஜியை தன் குருவாகக் கருதினார். அவரது வழிகாட்டுதலில் ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடைந்து, தியானம், வேதாந்தம் பற்றி கற்றுக்கொண்டார்.

சிவநேசன் ஸ்வாமிஜி சிறிது காலம் பம்பாயில் தங்கினார், பின்னர் அவர் வஜ்ரேஸ்வரியில் ஸ்ரீ நித்யானந்த ஸ்வாமிஜியின்

மடம் சென்றார். அங்கு வெகுவாக ஆன்மீக முன்னேற்றம் அடைந்தார். பின்னர் அவர் நாசிக் மாவட்டத்திலுள்ள திரைம்பகேஸ்வர் என்னும் திருத்தலத்திற்குச் சென்றார். அங்கு மவுனி பாபாவுடன் இருந்தார். பின்னர் இறுதியாக அவர் 1953 ல் ஷீரடி சென்றார்.

ஒரு வழியாக ஷீரடியை தனது தாயகமாக்கிக் கொண்டார். ஆனால் ஷீரடியில் அவர் தங்குவதற்கு இடம் கிடையாது, தூங்குவதற்கு வசதி இல்லை. கிடைத்த இடத்தில் தூங்குவார். பல சமயம் ஒரு கப் தேநீர்தான் உணவு. சில சமயங்களில் பூக்களைத் தின்று பசி தீர்ப்பார். பல நாள் பட்டினி கிடப்பதுண்டு. பாபாவின் கிருபையால் தங்க இடம் கிடைத்தது, தினமும் உணவும் கிடைத்தது. அவர் ஷீரடி வந்தபோது, சில புத்தகங்களைக் கொண்டு வந்திருந்தார். அவர் புத்தகப் பிரியர். வாசிப்பதில் ஆர்வம் காட்டினார். அங்கு துவாரகாமயி, சாவடி, லென்டிபாக் மந்திர் என பல கோயில்கள் உள்ளன. ஷீரடியில் உள்ள அனைத்து கோயில்களிலும் சேவை செய்வதிலேயே அவரது நேரம் செலவாயிற்று. மற்ற நேரத்தில் அவர் தியானத்தில் ஆழ்ந்து விடுவார்.

அந்தசமயத்தில்,ஷீரடிசாய்பாபாசன்ஸ்தான்நீதிமன்றஅதிகாரி (ரிசீவர்)கட்டுப்பாட்டின்கீழ்இருந்த்து.சிவநேசன் ஸ்வாமிஜியின் நேர்மையான தன்னலமற்ற சேவைகளை கவனமாக கவனித்து, மகிழ்ச்சி அடைந்த அந்த அதிகாரி துவாரகாமயி, லென்டிபாக், சாவடி உள்ளிட்ட எல்லா இடங்களிலும் விளக்கு ஏற்றுவது போன்ற வேலைகளை அவரிடம் ஒப்படைத்தார். அத்தகைய விளக்குகளின் எண்ணிக்கை 13 ஆகும். அந்த நாட்களில், சாவடி வியாழக்கிழமைகளில் மட்டும் பக்தர்களுக்கு திறந்து வைக்கப்பட்டது. துவாரகாமயியில் 'துனி'யை மிகுந்த பக்தியுடன் அவர் கவனமாக பார்த்துக் கொண்டார. அவரது ஆடை கரிபடிந்து அழுக்காயிற்று. ஆனால் அவர் தன் தோற்றம் பற்றிக் கவலைப்பட வில்லை. மாலை வேளையில் ஆரத்திக்கு முன்னதாக பாபாவின் புகைப்படங்களிலும் அதேபோல் பல்வேறு தெய்வங்களின் படங்களிலும் நேர்த்தியாக சந்தனப் பொட்டு வைப்பதில் கைதேர்ந்தவர் ஆனார். பல்வேறு

இடங்களில் விளக்கேற்றி வைப்பதையும் வழக்கமாகக் கொண்டார். அவரது அர்ப்பணிப்புடன் கூடிய பணிகளால் மகிழ்ச்சியடைந்த நீதிமன்ற ரிசர்வர் அவரை துவாரகாமயிக்கு பக்கத்து அறையில் உறங்குவதற்கு அனுமதித்தார். ஆங்கிலம், மராட்டி, பல தென்னிந்திய மொழிகள் உள்ளிட்ட பல மொழிகள் ஸ்வாமிஜிக்குத் தெரியும் என்பதால் ஷீரடிக்கு காணிக்கை மணியார்டர் அனுப்பிய பக்தர்களுக்கு உதி பிரசாதம் அனுப்புவதற்கான உறைகள் மீது பெயர், முகவரி எழுதும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. . இந்த சேவைகளுக்காக, சன்ஸ்தான் அவருக்கு மாதம் 15 ரூபாய் மதிப்பூதியம் வழங்கியது. அதை அவர் வரும் பக்தர்கள், பிறர் தேவைக்காக செலவிட்டு விடுவார்.. சில காலத்திற்குப் பிறகு, சன்ஸ்தான் அவருக்கு உணவும் வழங்கலாயிற்று. பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், பக்தர்களின் வருகைக்காக சாவடி அனைத்து நாட்களிலும் திறந்தே இருந்தது. ஸ்வாமிஜி வியாழக்கிழமைகளில் துர்காமயிலிருந்து சாவடிக்கு செல்லும் 'பால்கி' ஊர்வலத்திற்காக சாவடி அலங்காரத்தில் அதிக கவனம் செலுத்தலானார்.

நாங்கள் ஷீரடி சென்றபோது ஸ்ரீ சிவநேசன் சுவாமிஜியை சந்திக்கும் பெரும் பக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. சுவாமிஜி தன்னை புகைப்படம் எடுக்கவும் அனுமதித்தார்.

ஆன்மீகப் பாதையில் பக்தர்களுக்கு உதவுவதில் அவர் மிகவும் ஆர்வமாக இருந்தார். பல்வேறு மொழிகளில் புத்தகங் கள் வைத்திருந்தார். பக்தர்களுக்கு அவற்றை வழங்குவார். எல்லாருக்கும், குறிப்பாக நோயுற்றவர்களுக்கும் தொழு நோயாளிகளுக்கும் தேவை உள்ளோருக்கும், சேவை செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை அவர் முன்னுதாரணமாக இருந்து உணர்த்தினார். நிரந்தர 'துனி', அணையா விளக்கு சகிதம் பாரதத்திலும் வெளிநாடுகளிலும் அவரவர் நகரங்களிலும் கிராமங்களிலும் சாய் பாபா கோயில்களை கட்டும்படி பக்தர்களை ஊக்கப்படுத்தினர்.

மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற அவரது உள்ளார்ந்த விருப்பத்தின் காரணமாக அவரை ஏராளமானவர்கள்

பின்பற்றலானார்கள். சன்ஸ்தான் நூலகத்தில் மராட்டி மொழியில் அவர் 'சாய் லீலா' இதழ்களைப் படித்தார். சாய் பாபாவின் வாழ்க்கையும் பணியும் அற்புதங்களும் பாரதத்திலும் வெளிநாடுகளிலும் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் மக்களுக்குத் தெரியச் செய்ய மராட்டியிலிருந்து ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட பிற மொழிகளிலும் அவற்றை மொழிபெயர்க்கும்படி பக்தர்களை ஊக்கப்படுத்தினார். பல்வேறு மொழிகளில் பல்வேறு பக்தர்களுடனும் இரவு நேரத்திலும், அனைத்து மணிநேரங்களிலும் 'சத்சங்' நடத்தப்பட்டது. இவ்வாறு பல்வேறு வழிகளில் சாய் பாபாவின் அருள்வாக்கை எல்லா இடங்களுக்கும் அவர் பரப்பினார். அவர் பக்தர்களுக்கு எப்பொழுதும் உதி, தீர்த்தம் விநியோகிப்பார்.

பக்தர்கள் ஷீரடியை விட்டுப் புறப்படும் போது பாபாவின் புகைப்படத்துடன் சில ஆன்மீக / பஜன் புத்தகங்களை அவர்களுக்கு வழங்குவார் பக்தர்கள் குழுக்களாக "ஓம் சாய் ஸ்ரீ சாய் ஜெய் ஜெய் சாய்" என்று பாடி அகண்ட நாம ஜெபம் செய்யும் பழக்கம் இவரால் தொடங்கப்பட்டது. இவ்விதமாக பாபாவின் அருள்வாக்கை எல்லா இடங்களுக்கும் பரப்புவதற்கு ஸ்ரீ சிவநேசன் சுவாமிஜி கருவியாக இருந்தார்.

அவர் எளிய வாழ்க்கை நடத்தினார். அவரது ஆடை என்றால், இடுப்பைச் சுற்றி ஒரு பருத்தித்துண்டு. பாக்கெட் வைத்த அரைக் கை மகாராஷ்டிர பாணி அங்கி. படத்தில் காட்டப்பட்டுள்ளது போல இன்னொரு துண்டால் தலைப்பாகை கட்டி நீண்ட சடை முடியை மறைத்திருப்பார். ஆடை, அவருக்கு அன்பளிப்பாக கிடைத்த வேட்டிகள், சால்வைகள் ஸ்வெட்டர்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் அவர் பயன்படுத்தாமல் ஏழைகளுக்கும் தேவை உள்ளவர்களுக்கும் கொடுத்துவிடுவார். அவர் மஹாசமாதி அடைவதற்கு மூன்று நாள் முன்புகூட, அவர் சில நாள் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது கிடைத்த போர்வைகளையும் படுக்கை விரிப்புகளையும் விநியோகிக்க ஏற்பாடு செய்தார். அவர் படுப்பது எப்போதும் தரையில்தான். தடித்த படுக்கை விரிப்பும் போர்வையும் விரித்து உறங்குவார்;

ஆசனம் ஒரு கோணிதான்., ஒரு பையில் காகிதத்தை திணித்து தலையணை போல் வைத்துக் கொள்வார். அவர் கொளுத்தும் வெய்யில், மழை இவை பற்றிக் கவலைப்படவில்லை. தனக்குக் கிடைக்கும் குடைகளை விநியோகித்து விடுவார். ஷீரடியில் அவர் வசித்த காலமெல்லாம் காலணி அணியவே இல்லை. எப்போதும் வெறுங் காலுடன்தான் நடப்பார்.

அவர் குறைவாகவே உணவு ஏற்பார். தனக்கு வழங்கப்பட்ட பழங்களை பக்தர்களுக்கு விநியோகித்து விடுவார். தான் மனப்பாடம் செய்திருந்த பல பஜன் பாடல்களை மதுரமான குரலில் பாடிக்கொண்டிருப்பார். அவரே சில பஜன் பாடல்கள் இயற்றியிருந்தார். அவற்றை பக்தர்கள் சிறு புத்தகங்களாக அச்சிட்டிருக்கிறார்கள். அவர் பாடப் பாட பக்தர்கள் தொடர்ந்து பாடுவார்கள். இந்த நடைமுறை இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அவரது மகாசமாதி நாள் வரை நீடித்தது. மற்றவர்களுக்கு சொல்லித் தர பஜனைப் பாடல்களை புத்தகம் பாராமல் பாடுவார். ஒரு வார்த்தை பிசகாது.

குருஸ்தான், நந்தா தீப், லெண்டி பாக் தத்த மந்திர் இவற்றை வலம் வரும் (பிரதட்சிணம்) பழக்கத்தை ஊக்குவித்தார். பக்தர்கள் தங்கள் நலனுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் பிரதட்சிணம் செய்யும்படி அவர் அறிவுறுத்தினார். அவருக்கு மூலிகை மருத்துவம் அத்துபடி. பாதிக்கப்பட்ட பக்தர்களுக்கு வைத்தியம் சொல்வார். அநேகமாக முழுமையாய் குணமாகும். அல்லது குறைந்தபட்சம் உடனடி நிவாரணம் கொடுக்கும்.

துனி பூஜையில் நம்பிக்கைகொண்ட அவர் பக்தர்கள் துனி பூஜையும் சத்யநாராயண பூஜையும் செய்யச் சொல்வார்.. அவருடைய போதனை முறை எளிமையானது. விஷயங்களை குட்டிக் கதைகளாலும் எளிய உவமைகளாலும் புரிய வைப்பார். அன்னதானம் தான் தலைசிறந்த அறப்பணி என்று அவர் திட்டவட்டமாகக் கூறுவார்.

சேலத்தின் தேவி மாயி அம்மா, பதசிங்காவின் விதேஹி அனுசூயா மாதா, கர்னூல் ராம்ரெட்டி தாத்தா, ஹைதராபாத் நயம்பள்ளி பாபா போன்ற சாதுக்களின் பெருமை பற்றி அவர் பக்தர்களுக்கு எடுத்துக் கூறுவார். அத்தகைய சாதுக்களின்

தரிசனம் பெற விரும்பியவர்களை அவ்வாறே செய்ய ஊக்கப்படுத்தினர்.

நாற்பத்தைந்து ஆண்டுக் காலம் ஷீரடியில் வசித்த ஸ்வாமிஜி சாய் பாபாவின் மகத்தான தூதர் ஆனார். பாபாவுக்கும் பாபாவின் பக்தர்களுக்கும் நேர்மையாக, முழுமனதுடன், தன்னலமில்லாமல் சேவை செய்தார்.

> ஷீரடியில் 1996 பிப்ரவரி 12 திங்கள்கிழமை அன்று காலமான ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி பாபாவுடன் ஐக்கியமானார். துவரகாமயி விளக்குகள் ஊஞ்சலாட்டம் இந்த ஐக்கியத்தைக் குறிப்பதாக பலருக்கு நம்பிக்கை. ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியின் அஸ்தி கலசம் ஷீரடியில் சன்ஸ்தான் பிரசாதாலயாவிலிருந்து இரண்டரை கிலோமீட்டர் தொலைவில் பிம்பள்வாடி சாலை விலக்கில் ஸ்ரீமதி ஜரீன், அவரது நண்பர்கள் ஆகியோரால் அமைக்கப்பட்டது.

பாபாவின் செய்திகளை பரப்புவதில் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஸ்வாமிஜி. சாய் பாபா கோவில்கள் கட்டியெழுப்பும்படியும், பாபா சேவையில் ஈடுபடும்படியும் பாபாவின் அருள்வாக்கை பரப்பும்படியும் ஷீரடி வரும் அனைத்து பக்தர்களையும் அவர் அறிவுறுத்தி வந்தார்.

ஸ்வாமிஜி அடிக்கடி பாடுவார்: “ஹரித்வார், மதுரா காசி ஷீரடி மேம் ஸப தீர்த்த ஸமாயே ஹைம், சாய் பாபா கே சரணோம் மேம் சாரோம் தாம் ஹமாரா ஹைம்”. இதன் பொருள்: ஷீரடி ஒரு தீர்த்த க்ஷேத்திரம், ஹரித்வார், மதுரா காசி அனைத்தும் இதில் அடக்கும். சாய் பாபா திருப்பாதங்களில் நான்கு புனிதத் தலங்களும் உறைகின்றன என்பதுதான்.

அனைவருக்கும் பாபா அருளாசி கிடைக்கட்டும்.

# ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி வாழ்வில் மகான்கள்



**கணேஷ்புரி நித்யானந்த சுவாமி**

ஆரம்பத்தில் ஸ்ரீ சிவநேசன் கணேஷ்புரி ஆஸ்ரமம் சென்றபோது ஷீரடி செல்லும்படி நித்யானந்த சுவாமி அவரை ஆற்றுப்படுத்தினார்.

**ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி**



ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியை ஷீரடியில் இருக்கும்படி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் ஸ்வாமிஜி கூறினார். அதன்படி அவர் வாழ்நாள் முழுதும் ஷீரடியிலேயே வசித்தார்.



**சாகோரி கோதாவரி மாதாஜி**

சாகோரியிலிருந்து மாதாஜி ஷீரடி வரும் போதெல்லாம் சமாதி மந்திர் தரிசிக்க அவர் போகும்போது மாதாஜியுடன். ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி உடன் செல்வார்.

**மாயம்மா**



மாயம்மா உயிருடன் இருந்தபோதும் சரி, சமாதிக்குப் பிறகும் சரி மாயம்மாவை தரிசிக்கும்படி சிவநேசன் ஸ்வாமிஜி அனைத்து சாய் பக்தர்களையும் கேட்டுக்கொள்வார். அவர் அறையில் அம்மா புகைப்படம் இருந்தது.



## ஹைதராபாத் ஸ்ரீ நாமபள்ளி பாபா

ஹைதராபாத் ஸ்ரீ நாமபள்ளி பாபாவை தரிசிக்கும்படி ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி சாய் பந்துக்களை அறிவுறுத்துவார்.




## பரட்சிங்கா அனசூயா மாதா

சிவநேசன் ஸ்வாமிஜி பரட்சிங்கா சென்று, அம்மாவை தரிசனம் செய்ய பக்தர்களை ஊக்குவிப்பார். மாதாவை ஷீரடிக்கு வரச் செய்தார். அவர் அறையில் மாதா புகைப்படம் இருக்கும்.



## கர்நூல் ராம் ரெட்டி தாத்தா

ராம் ரெட்டி தாத்தாவை தரிசனம் செய்து வாருங்கள் என்று ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி குருபந்துக்களை அறிவுறுத்துவார். அவரை ஷீரடி வருகைபுரியச் செய்தார். அவருக்கு அவதூதர்கள் என்றால் மிகவும் பிடிக்கும்.



## கோயில் திருப்பணி

ஷீரடியிலேயே 40 ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தாலும் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி உலகம் முழுதும் சாய் கோயில்கள் மலரச் செய்தார். ஷீரடியில் அவர் துவாரகாமயி, குருஸ்தான், சாவடி என அனைத்து திருத்தலங்களிலும் சேவை செய்து வந்தார்.



## துவாரகாமயியில்

துவாரகாமயி துனி அருகில் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி முன்பு துனி திறந்திருந்தது. பக்தர்கள் துனியில் தேங்காய் சமர்ப்பிப்பார்கள். இப்போது துனி மூடப் பட்டிருக்கிறது. பூஜாரிதான் காலையில் நைவேத்யம் செய்து தேங்காய் சமர்ப்பிக்கிறார்.

## குருஸ்தானில்



குருஸ்தான் முன்பாக உள்ள புனித அக்னி. பக்தர்கள் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இதில் ஊதுபத்தி சாம்பிராணி சமர்ப்பிக்கிறார்கள். அக்னி அருகில் வழிபடும் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி.




பழைய குருஸ்தானுக்குள் ஸ்சுவாமிஜி இது பிறகு நீக்கப்பட்டது. அதன் புகைப்படம் மட்டும் அங்கே தற்போது வைக்கப்பட்டுள்ளது.



வேப்பமரத்தை பின்னுக்குத்தள்ளி வைத்துவிட்டார்கள். சாவடியில் ஸ்வாமிஜி பஜனைப் பாடல்கள் பாடுகிறார். நாள்தோறும் ஸ்வாமிஜி மாலை சரியாக எட்டு மணிக்கு பஜனை பாட ஆரம்பிப்பார். சமாதி மந்திர் ஆரத்தி தொடங்கும் வரை பாடுவார். அவர் ஆயுள் முழுவதும் இந்த பழக்கம் நீடித்தது.





◁ **சாவடியில்** ▷

## பாபாவின் 'அண்ணா'



ஷீரடியில் உள்ள அனுமார் கோயிலில் தரிசனம் செய்கிறார் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி. சாய்பாபா இந்த அனுமனை அண்ணா என்று குறிப்பிடுவார். அவர் தெருவோடு நடந்து போகும்போது இந்த அனுமன் கோயிலை நோக்கி கையசைத்து அண்ணா என்று அழைப்பார். சுவாமிஜி ஷீரடி வந்த புதிதில் சில ஆண்டுகள் இந்த அனுமன் கோயில்தான் தங்கினார். ஷீரடியில் உள்ள கனிப்நாத் கோயிலிலும் தங்கினார்.

## பிரதட்சிணம்



குருஸ்தானிலும் லெண்டிபாக் நந்தா தீபத்தையும் தத்தமந்திரையும் தினந்தோறும் பிரதட்சிணம் செய்வது ஸ்வாமிஜியின் அன்றாட அனுஷ்டானம். ஆயுள் முழுவதும் அவர் இதை அனுஷ்டித்தார். புது குருஸ்தான் அமைக்கும் பணி காரணமாக குருஸ்தான் பிரதட்சிணம் நிறுத்தப்பட்டது. காலையிலும், மாலையிலும் அவர் பிரதட்சிணம் செய்வார். பிரதட்சிணம்செய்யுமாறு பக்தர்களையும் தூண்டுவார்.

## சிவநேசன் சுவாமிஜிக்கு நெருக்கமான பக்தர்கள்



சிவநேசன் ஸ்வாமிஜியின் ஆப்த நண்பர் மோகன் பாபா. கர்நாடகா மங்களூருவை சேர்ந்தவர். ஷீரடியிலேயே வாழ்ந்தார். சுவாமிஜிக்கு சாவடியில் உறுதுணையாக இருந்தார். ஸ்வாமிஜி காலமான பிறகு இவரை சுவாமிஜியின் இன்னொரு நண்பர் சியாராம் கவனித்துக்கொண்டார். இவர் ஷீரடியிலேயே காலமானார். பிராணாயாமப் பயிற்சியில் தனி கவனம் செலுத்தினார். ஹனுமான் சாலீசாவை ஒரே மூச்சில் பாடுவார்.



காலஞ்சென்ற திருப்பூர் மணி மும்பை மாதுங்காவில் தையல்கடை வைத்திருந்தார். தொழிலை விட்டு ஓய்வு பெற்றபின் ஷீரடி வந்து ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியுடன் நெருக்கமானார். அக்னி கொடுத்து ஸ்வாமிஜியின் இறுதிச் சடங்கு செய்தவரும் அவரே.



மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த சியாராம் ஷீரடியில் ஒரு ஹோட்டல் நடத்தி வந்தார். ஸ்வாமிஜி சொல்லியபடி ஏழை எளியவர்களுக்கும் சாதுக்களுக்கும் பக்கீர்களுக்கும் செலவைப் பாராமல் உணவளித்து வந்தார். ஷீரடி சுற்றுவட்டார ஊர்களில் இலவசமாக சுமார் 1,000 அனுமார் அலங்காரம் நேர்த்தியாக செய்துள்ளார். படிக்காதவர், ஆனால் கட்டிடக் கலை வல்லவர். பெரியநாயக்கன் பாளையத்தில் குருஸ்தான், பெங்களூர் கேதுஹள்ளி துவாரகாமயி இரண்டையும் பழைய பாணியிலேயே நிர்மாணிப்பதில் உறுதுணை புரிந்தவர்.

## நாள்முழுதும் சாய் நினைவு வர



"உன் சுவாசத்தை ஊன்றி கவனி. ஒவ்வொரு முறை மூச்சு எடுக்கையிலும் "சா..." என்றும் மூச்சு விடுகையில் "ய்..." என்றும் சொல்லு. ஒரு நாளில் 26,300 முறை சுவாசிக்கிறாய் அல்லவா, அதனால் நாள் முழுதும் சாய் நினைப்புடனேயே இருப்பாய். தினமும் பயிற்சி செய்தால் இது கைகூடும்" என்பார் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி.

# பெங்களூரு கேதுஹள்ளி துவாரகாமயி சாய் மந்திர்




**பெ**ங்களூர் மாநகரின் கேதுஹள்ளி புறநகர்ப் பகுதியில் 2016 மார்ச் 13 அன்று ஒரு புதிய சாய் மந்திர் திறக்கப்பட்டது. இந்த மந்திரை கிராமத்தின் சில பக்தர்களால் நிறுவப்பட்ட 'ஷீரடி துவரகாமயி அறக்கட்டளை' நிர்வகிக்கிறது. மைசூரு நெடுஞ்சாலயில் ராஜராஜேஸ்வரி மருத்துவக் கல்லூரி அருகே வலதுபுறம் திரும்பி கங்கேரி - நெலமங்கல சாலையில் வந்தால் பெரிய ஆல மரம் நிற்கும் ராமோஹள்ளியை அடையலாம்; அங்கிருந்து கேதோஹள்ளி 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

இந்த புதிய கோவில் '70 களின் ஷீரடி துவாரகாமயி போன்றே தோற்றமளிக்கிறது. புனித துனி எரிகிறது; சாய் பாபாவின் மற்ற அனைத்து பொருட்களும் பிரதியெடுக்கப்பட்டு இங்கு காட்சியளிக்கின்றன. சாவடி ஸ்வாமி என்று புகழ்பெற்ற ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியின் திருவுருவப்படம் இக்கோயிலின் சிறப்பு அம்சம்.

## சாய் பாபாவின் 'துனி', 'உதி'

ஷீரடியில் வந்து தங்கிவிட்டபின் பாபா தனது யோக சக்தியால் தீ பற்ற வைத்தார். அது இன்னும் எரிகிறது. இது 'துனி'; அதன் புனிதமான சாம்பல் 'உதி' என்று அழைக்கப்படுகிறது.

பாபா பல நோய்களுக்கு மருந்து அளித்தார் நோயாளிகளுக்கும் சேவை செய்தார். பின்னர், பாபா நோயாளிகளுக்கு பூசிக்கொள்ளவும் உள்ளுக்கும் 'உதி' மட்டுமே கொடுத்தார். உதி பற்றிய சில அற்புதமான செய்திகள் சாயி பக்தர்களுக்கு நன்கு தெரியும். பாபாவின் துனிக்கு எரிபொருள் அளித்தார் விறகு வியாபாரி அப்பா பீல். இரண்டு கட்டு விறகு விற்றதும் துனிக்கு ஒரு கட்டு கொடுத்துவிடுவார்.

1952 முதல், ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி சாவடியில் வசிக்கலானார். துனிக்கு பூஜை செய்ய அவருக்கு மிகவும் பிடிக்கும். 1984 வரை பக்தர்கள் துனிக்கு பூஜை செய்தனர். சன்ஸ்தான் அதிகாரிகள் ஆட்சேபணை செய்தபின், அவர் துனி பூஜையில் ஊக்கம் காட்டாதவராக இருந்தார். 2000 ம் ஆண்டு இதுவும் நிறுத்தப்பட்டது. இப்போது பக்தர்கள் துனிக்கு தேங்காய் வழங்கலாம். அதை சன்ஸ்தான் ஊழியர்கள் பின்னர் படைப்பார்கள்.

சாயிபாபாவின் புதிய கோவில் ஆரம்பிக்கப்படும் போது, துனியை நிறுவும்படி ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜி பரிந்துரைப்பார். எனவே, கிட்டடத்தட்ட அனைத்து சாய் மந்திர்களிலும் துனி துவங்குவதற்கு அவர் காரணமாக இருந்தார். எங்களில் சிலர் ஸ்ரீ சிவநேசன் ஸ்வாமிஜியின் பக்தர்கள் என்பதால், நாங்கள் புதிய மந்திரில் துனி நிறுவினோம். சாய் பாபா, ஸ்ரீ ராதாகிருஷ்ண ஸ்வாமிஜி ஆகியோர் அருள் பெற்ற தியாகராஜநகர சாய் மந்திரிலிருந்து துனி அக்னி கிடைக்கப் பெற்றது எங்கள் பெரும் பேறு.

சாய் பாபா துனியை எரியச் செய்து வந்தார். இதனால் அவரது பக்தர்கள் தங்கள் எதிர்மறை எண்ணங்களையும் காமம், குரோதம் முதலிய ஆறு உள் பகைவர்களையும் துனியில் போட்டுவிட்டு தங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு தூய்மையும் கற்பும் / பிரமசரியமும் பொருந்திய, சாய் மையமிட்ட வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

● தாஜுத்தீன் பாபா, சாய் பாபாவின் சமகாலத்தவர். ஒரு நாள் அவரது மசூதியில் தீப்பிடித்தது. அதே நேரத்தில் ஷீரடியில் துனி முன்பாக அமர்ந்திருந்தார் சாய் பாபா. தனது கரங்களால் சில சைகைகள் செய்தார். அருகில் இருந்தவர்கள் என்ன என்று கேட்டார்கள் "தாஜுத்தீன் மசூதியில் தீப்பிடித்து விட்டது. நான் அதை அணைத்து கொண்டிருக்கிறேன்" என்று பாபா பதிலளித்தார் மறுநாள்: "தர்காவில் தீப்பிடித்தது. நான் பாபாவை நினைத்துக்கொண்டேன். தீ அணைந்து போயிற்று" என்று தாஜுத்தீனிடமிருந்து தகவல் வந்தது.

● கொல்லர் ஒருவர் சாய் பாபாவின் பரம பக்தர். ஒருநாள் பாபா துனி அக்னிக்குள் இரண்டு கைகளையும் நுழைத்து எதையோ

காப்பாற்றுவது போல வெளியே எடுத்தார். “பாவம், அந்தப் பெண். நான் ஒரு கணம் தாமதித்திருந்தால் தீயில் இறந்து போயிருப்பாள்” என்றார்.

நடந்தது இதுதான்: விளையாடிக் கொண்டிருந்த கொல்லரின் மகள் உலைக்குள் விழுந்துவிட்டாள். அதை ’பார்த்த’ பாபா அவளை காப்பாற்றி விட்டார். பாபாவின் கரங்கள் தீய்ந்தன. ஆனால் அந்த பெண் பிழைத்து விட்டாள்.

துவாரகாமயி துனி நம் எல்லோருக்கும் அம்மா போல. துனியிலிருந்து உதி எடுக்கும்போது பாபா ஹரி ஹரி என்று ஜெபிப்பார். உதியில் சாட்சாத் மகாவிஷ்ணுவை தரிசிக்கலாம். ஹரியின் கிருபையைக் கொண்டு வந்து சேர்ப்பது அந்த உதி. முதலாவதாக உதி பிரசாதம். இரண்டாவது, அது அருமருந்து. மூன்றாவது, அது சாய் பாபாவின் அன்பின் அடையாளம். பாதுகாக்கும் தாயத்து போன்றது அது.

காமமும் ஆசாபாசங்களும் மலிந்த உலகாயத வாழ்க்கை நிலையற்றது, அது மாயை, கணத்தில் அழிவது என்பதையே உதி காட்டுகிறது. மரணத்தால் சரீரம் அழிந்தாலும் அதைத் தாண்டி ரீங்காரமிடும் தெய்வீக அமரத்துவம் வாய்ந்த வாழ்க்கை எனும் நாதத்தை நமக்கு சுட்டிக் காட்டுகிறது உதி.

உதி புனிதமானது, மங்களகரமானது, கவசம் போன்றது, தெய்வீக கருணையின் வடிவமானது, அமுதமயமான இறையன்பின் அடையாளம் அது.

## வருக, அருள் பெறுக!

அன்பு மிகுந்த சாய் பந்துகளே, கேதுஹள்ளியில் உதயமாகியுள்ள புதிய சாய் மந்திருக்கு தயவு செய்து வாருங்கள். .துனிக்கு அனைத்தையும் அர்ப்பணித்து நீங்கள் பூஜை செய்யும்போது நமது ஆசானின் அன்புப் பிணைப்பை அனுபவியுங்கள். சாய் பாபா சான்னித்தியத்தில் சங்கமம் ஆகுங்கள்.

# சாய் மந்திர் வழிகாட்டிக் குறிப்புகள்

**சா**ய் மந்திர் விஷயத்தில் ஆழமான ஈடுபாடு உள்ள அனைவரும், நிர்வாக கமிட்டி தலைவர், செயலர், உறுப்பினர் அல்லது மந்திரில் பூஜை செய்யும் பூஜாரி என யார் ஆனாலும், அவர்கள் பொறுப்பு மிகக் கடினமானது. கோயிலில் தான் ஒரு சேவகன், எஜமானன் அல்ல என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். கோயிலுக்கு வரும் ஒவ்வொருவரையும் சமமாக மதித்து வினயமாக நடத்துவது மிகவும் அவசியம். பணக்காரரும் பரம ஏழையும் ஒன்று போல கருதப்பட்டு நடத்தப்பட வேண்டும். எந்த வித்தியாசமும் பார்க்கக் கூடாது. எவர் பின்னாலும் ஓடுவதோ எந்த ஒரு ஏழையையும் புறக்கணிப்பதோ கூடவே கூடாது. எவருக்கும் விசேஷ கவனம் தருவதில்லை, எவரையும் அவமதிப்பதில்லை என்ற எண்ணத்தை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். கோயிலுக்கு வரும் ஒவ்வொருவரையும் அவர்கள் பாபாவின் மறு வடிவமாகவே பார்த்து அவருக்கு சேவை செய்யும் உணர்வு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தங்களை கோயில் அதிகாரியாக அல்லாமல் பக்தராக கருதிக் கொள்ளும் மனப்பான்மை வேண்டும்.

பாபா சன்னிதியில் அன்பு அலையடிக்கச் செய்ய வேண்டும்; அனைவரிடமும் சோதர பாசம் காட்ட வேண்டும். கோபம், வெறுப்பு, அவமதிப்பு இவ்வற்றைக் கோயிலுக்கு வெளியே விட்டுவிட வேண்டும். கோயிலுக்குள் அன்பின் அலைகள், தெய்வீகத்தின் அதிர்வுகள் மாசுபட விடக்கூடாது. பக்தர்களிடம் எரிந்து விழுவது பாபாவிடம் எரிந்து விழுவது போலத்தான். மதிப்போ பூவோ மாலையோ பிரசாதமாகப் பெறுவது பக்தரின் உரிமை. இவை கோயிலில் அவருக்கு கிடைக்க வேண்டும். கோயில் நிர்வாகம் தன்னை பக்தராக முதலில் உணரவேண்டும். அதிகாரம் காட்டும் அங்கி தரிப்பது அப்புறம்தான்.

சில ஆராய்ச்சியாளர்கள் பாராட்டத்தக்க விதத்தில் ஆராய்ச்சி செய்து 'சாய் சத்சரித' நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உண்மைக்குப் புறம்பாக இருப்பதாகக் கண்டறிந்துள்ளார்கள்.

சாய் பக்தர்களுக்கு 'சாய் சத்சரிதா' ராமாயணம் போல, பகவத் கீதை, பைபிள் போல என்பது நமக்கு நன்கு தெரியும். பாபாவிடம் திட்டவட்டமான ஒப்புதல் பெற்று பாபா ஆசியுடன் இந்த மகத்தான நூலை எழுதத் தொடங்கியவர் ஹேமத் பந்த்; 'சாய் சத்சரிதா' வெளியிடப்பட்டதும் சாய் பக்தர்களுக்கு அது ஆதி கிரந்தம் ஆகிவிட்டது. என்னதான் உண்மையாக இருக்கட்டுமே, வேறு எந்த விஷயத்தையும், அது தங்கள் பக்தியை வேரறுக்கும் என்பதால், காது கொடுத்து கேட்க சாயி பக்தர்கள் தயாராயில்லை. அதுமட்டுமல்ல, பாபா 'இந்த' ஊரில் பிறக்கவில்லை, 'அந்த' ஊரில் பிறந்தார் என்று தெரிந்துகொள்வதில் யாருக்கு என்ன பயன் என்பதைப் புரிந்து கொள்வோம். என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன், என்னுடைய பக்திக்குக் குந்தகமான எது ஒன்றையும் நான் கேட்கவோ தெரிந்து கொள்ளவோ போவதில்லை. ஒரு உதாரணம்: பதினாறாவது நூற்றாண்டில் துளசிதாசர் எழுதிய 'ராம சரித மானஸ்' கோடானு கோடி ராம பக்தர்களின் நாடிநரம்புகளில் கலந்துவிட்டது. அவர்கள் அன்றாடம் ராம சரித மானஸ் பாராயணம் செய்து வருகிறார்கள். அதன் ஒவ்வொரு சொல்லிலிருந்தும் உத்வேகம் பெறுகிறார்கள். அதில் கூறப்பட்டுள்ள பல விஷயங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். ஆனால் இந்த புனித நூலில் நம்பிக்கை வைத்துள்ள பக்தர்கள் இதைப் பற்றி எல்லாம் துளிக்கூட கவலைப்படவில்லை. எனவே, பக்தரின் சிரத்தையை சீர் குலைத்து அவரது நம்பிக்கையை சிதைக்கும் விஷயங்கள், - அவை உண்மையாகவே இருந்தாலும் - அவற்றை வெளிக்கொணர்வது, எடுத்துச் சொல்வது இவற்றை நாம் தவிர்க்க வேண்டும்.

